கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(16.06.2019 - 16 ஆனி 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 210, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி

ඥාන ඔළි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05







# கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தின் மீள் திறப்பு

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, 12.06.2019 அன்று மாலை 5.00 மணிக்கு கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் மீள் திறப்பு செய்யப்பட்டு, ஆலயம் ஆசீர்வதிக்கப்பட்டது. இந்நிகழ்வில் துணை ஆயர்களும், ஆலய பரிபாலகரும், அருட்பணி. ஜோய் மரியரட்ணம் அடிகளார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அததோடு அருட்பணியாளர்களும், அருட்சகோதரர்களும் மக்களும் கலந்துகொண்டனர்.

## கத்தோலிக்க மறைபாடசாலை இறுதி சான்றிதழ் தேர்வு – 2019

15

## பரிசளிப்பு விழாவில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பேராயர்



**இன்று எமது நாடு மனித படுகொலை கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக உள்ளது!**

காலி அக்மீமன தல்கஸ்ஸாய அஸ்வத்தாராம புராண விகாரை ஸ்ரீ பவரகீர்த்தி மறைபாடசாலை பரிசளிப்பு விழாவில், சிறப்பு விருந்தினராக; புராண விகாராதிபதி வண. மதுகம குணரத்ன அவர்களின் அழைப்பின்பேரில் கலந்துக்கொண்ட கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள், இன்று எமது நாட்டில் மனித படுகொலை கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகியுள்ளது! எமது நாட்டின் நிலங்கள் மீண்டும் மனித இரத்தத்தால் நிரப்பும் நிலை உருவாகியுள்ளது. இது மிகவும் ஆபத்தான நிலையாகும். 15
இதற்கான காரணம் அரசியல் சட்டத்தில் சரிவு ஏற்பட்டமையாகும்....

## “தூய மேய்ப்பர்களாவதற்கு அழைப்பு”

# இறை அழைத்தல் ஞாயிறு 2019

பாஸ்கா ஞாயிறன்று இடம்பெற்ற சம்பவத்தினால் உலக மற்றும் தேசிய இறை அழைத்தலுக்காக செபிக்கும் தினம் திட்டமிடப்பட்ட நாளாகிய 12ம் திகதி வைகாசி மாதம் 2019ம் திகதியன்று பல பங்குகளில் ஒழுங்கு செய்யப்படவில்லை. இலங்கை ஆயர் பேரவையினருடன் கலந்தாலோசித்த பின், எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி, 21ம் திகதி ஆடி மாதம் 2019ற்கு முன்னர் வரும் ஏதேனும் ஞாயிறன்று பங்குகளில் “இறை அழைத்தல் ஞாயிறை” சிறப்பிக்கும் படி பரிந்துரை செய்கின்றார்கள்.

அனைத்து பங்குத் தந்தையர்களும் பங்கு மக்களும் “இறை அழைத்தல் ஞாயிறு 2019” சிறப்பான முறையில் கொண்டாடவும் குறிப்பாக குருத்துவ மற்றும் துறவற வாழ்வுக்காக செபிக்கவும், பெரிய குருமடங்களாகிய அம்பிடிய, யாழ்ப்பாணம் மற்றும் களுத்துறை இடைநிலை குருமடத்திற்கு உதவி செய்ய மக்களை ஊக்கப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

**கண்டி தேசிய குருமட அதிபர் மற்றும் ஏற்பாட்டுக் குழு**

## எமது சகோதர மெசஞ்சர் பத்திரிகைக்கு புதிய ஆசிரியர்

**அருட்பணி. கலாநிதி. கமிலஸ் பர்னாந்து அடிகளார்**



கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின் இயக்குனரும், ஞானர்த்த பிரதீப்பய பத்திரிகையின் ஆசிரியருமான அருட்தந்தை அவர்கள் அச்சகத்தின் இன்னுமொரு பத்தரிகையான மெசஞ்சர் பத்திரிகையின் புதிய ஆசிரியராகவும் நியமனம் பெற்று புதுப்பொறுப்பினை ஏற்றுள்ளார். இவருடைய பணி மேலும் சிறந்து விளங்க இறையாசீரோடு ஞான ஒளி வாழ்த்துகின்றது.

# புனித யோசேவ்வாஸ் இறையியல் நிலையத்தின் 15வது பட்டமளிப்பு விழா



இறையியல் கல்வியை இந்நாட்டு மக்கள் பின்பற்றவும் கலாச்சாரத்துடன் நெருங்கி வாழவும் வழிவகுத்த அருட்தந்தை யாக்கோபே கொன்சல்வஸ் அடிகளாரின் பங்களிப்பு அதி உயர்ந்ததாகும்.

1705ம் ஆண்டு இந்நாட்டுக்கு மறைத்தூதராக வருகைத்தந்த அருட்தந்தை யாக்கோபே கொன்சால்வாஸ் அவர்களும், கிறிஸ்தவ மதத்தை இந்நாட்டில் மீண்டும் புதுப்பித்ததைப் போல், உள்ளத்திற்கும் கலாச்சாரத்திற்கும் நெருக்கமாக்க மேற்கொண்ட பிரயாசம் அதிவிசேமாகும். கிறிஸ்தவ மறை, இந்நாட்டில் வேரூன்ற, பரந்துசெல்ல நாட்டுப்பற்றாளராக மாற வேண்டும் என தீர்மானித்தார்... 15

**ஆண்டவரே உமது பெயர் உலகெங்கும் மேன்மையாய் உள்ளது. (தி.பா 08)**

# கத்தோலிக்க ஆயர்கள் நியமனம் – இலங்கை ஆயர் பேரவை : 2019 – 2022

**தலைவர்**
மேதகு. J. வின்ஸ்டன் S. பர்னாந்து SSS ஆண்டகை

**உப தலைவர்**
மேதகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை

**செயலர்**
மேதகு. J. D. அந்தனி ஆண்டகை

**நிரந்தர உறுப்பினர் குழு**
மேதகு. J. வின்ஸ்டன் S. பர்னாந்து SSS ஆண்டகை
மேதகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை
மேதகு. J. D. அந்தனி ஆண்டகை
அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை
மேதகு. நோர்பட் M அந்திராடி (O.M.I) ஆண்டகை
மேதகு. ரேமன் விக்ரமசிங்க ஆண்டகை

**நிதித் துறை ஆணைக்குழு**
மேதகு. ஹெரல்ட் அன்தனி பெரேரா ஆண்டகை (தலைவர்)
மேதகு. D. வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை (உப தலைவர்)
மேதகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை (உப தலைவர்)

**உதவிச் செயலர் – கத்தோலிக்க ஆயர் பேரவை**
அருட்பணி. டோனி மார்ட்டின்

**கல்வி, மறைக்கல்வி, விவிலியப் பணிகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. D. வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை (தலைவர்)
மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகை (உப தலைவர்)

**நீதி, சமாதானம், மனித முன்னேற்றப் பணிகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை (தலைவர்)
மேதகு. மெக்ஸ்வல் கிறன்வில் சில்வா ஆண்டகை (உப தலைவர்)

**புலம்பெயர்ந்தோர், உடல் நலம், சுற்றுலா, சிறைச்சாலை பணிகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. ரேமன் விக்ரமசிங்க ஆண்டகை (தலைவர்)
மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை (உபதலைவர்)

**மத உரையாடல், உறவுகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. நோர்பட் M அந்திராடி (O.M.I) ஆண்டகை (தலைவர்)
மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகை (உப தலைவர்)

**சமூக தொடர்பாடலுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. மெக்ஸ்வல் கிறன்வில் சில்வா ஆண்டகை (தலைவர்)
மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை (உப தலைவர்)

**துறவற, உலகுற சபைகள், குருக்கள், குருமாணவர்களுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. J. வின்ஸ்டன் S. பர்னாந்து SSS ஆண்டகை (தலைவர்)
மேதகு. D. வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை (உப தலைவர்)
மேதகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை (உப தலைவர்)

**மறைபரப்புப் பணிக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. ஹெரல்ட் அன்தனி பெரேரா ஆண்டகை (தலைவர்)
மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகை (உப தலைவர்)

**திருவழிபாடு, கலாச்சாரப் பணிகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. கிளிட்டஸ் C பெரேரா (O.S.B) ஆண்டகை (தலைவர்)
மேதகு. F. லயனல் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை (உப தலைவர்)

**பொதுநிலையினருக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. ரேமன் விக்ரமசிங்க ஆண்டகை (தலைவர்)
மேதகு. ஹெரல்ட் அன்தனி பெரேரா ஆண்டகை (உப தலைவர்)
மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை (உபதலைவர்)

**பொது மக்கள் தொடர்பு**
அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை

**ஒழுக்கவியல், திருச்சபைச் சட்ட ஆலோசகர்**
அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை (தலைவர்)
மேதகு. D. வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை (உப தலைவர்)
மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை (உபதலைவர்)
மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகை (உப தலைவர்)

**மிசியோ புலமைப் பரீட்சை கல்விக்கான அமைப்பு**
மேதகு. ஹெரல்ட் அன்தனி பெரேரா ஆண்டகை (தலைவர்)
மேதகு. F. லயனல் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை (உபதலைவர்)

**இலக்குக் கல்விக்கான ஆயர் அமைப்பு**
மேதகு. J. D. அந்தனி ஆண்டகை (தலைவர்)
அருட்பணி. டோனி மார்ட்டின் அடிகளார் (நடுவர்)

**யோசவ்வாஸ் செயலகம்**
மேதகு. வியானி பர்னாந்து ஆண்டகை - கண்டி (தலைவர்)

**யோசவ்வாஸ் நிதியம்**
அதிமேதகு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை (தலைவர்)

**லயனல் B. இம்மானுவேல் அறக்கட்டளை நிதியம்**
மேதகு. ஹெரல்ட் அன்தனி பெரேரா ஆண்டகை (தலைவர்)
மேதகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை (உப தலைவர்)

# தேசிய இயக்குனர்கள் மற்றும் அருட்தந்தையர்கள் நியமனம் 2019 – 2022

1. **மறைக்கல்வி, கல்வி, வேதாகம ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
   - அருட்தந்தை. பேனட் சாந்த பர்னாந்து (மறைக்கல்வி மற்றும் வேதாகமம்)
   - அருட்தந்தை. ஐவன் பெரேரா (கல்வி)
2. **சமூக தொலைத்தொடர்பாடல் பற்றிய தேசிய இயக்குனர்**
   - அருட்தந்தை லால் புஷ்பதேவ, (அமதி)
3. **மத உரையாடல் ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
   - அருட்தந்தை. பெசில் றொகான் பர்னாந்து
4. **திருவழிபாடு, கலாச்சாரப் பணிகளுக்கான ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
   - அருட்தந்தை. T. சூசைநாதன்
5. **பொதுநிலையினருக்கான ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
   - அருட்தந்தை றோய் கிளரென்ஸ்
6. **சிறிய கிறிஸ்தவ குழுக்கள் (அசிபா) ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
   - அருட்தந்தை ஹயசிந்த் திசேரா
7. **புனித. வின்சன் டி போல் சபை ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
   - அருட்தந்தை றோய் கிளரென்ஸ்
8. **கத்தோலிக்க தேசிய பொதுநிலையினருக்கான ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
   - அருட்தந்தை. டோனி மார்ட்டின்
9. **சமாதான மற்றும் மனித அபிவிருத்தி பற்றி தேசிய ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
   - அருட்தந்தை. மகேந்திர குணதிலக்க
10. **புலம்பெயர்ந்தோர், உடல் நலம், சுற்றுலா, சிறைச்சாலை பணிகளுக்கான தேசிய ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
    - அருட்தந்தை சஞ்சீவ மென்டிஸ்
11. **மரியாயின்சேனை ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
    - அருட்தந்தை இக்னேஷியஸ் வர்ணகுலசிங்கம்.
12. **கத்தோலிக்க இளைஞர் சங்கத்தின் தேசிய இயக்குனர்**
    - அருட்தந்தை. மெல்கம் பெரேரா
13. **குடும்ப அப்போஸ்தலிக்க பணியகத்தின் தேசிய இயக்குனர்**
    - அருட்தந்தை. குளோட் N. நோனிஸ்
14. **குருசில்லோ ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
    - அருட்தந்தை. டோனி மார்ட்டின்
15. **புனித.லூக்காவில்மருத்துவகுழுஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
    - அருட்தந்தை. கிறிஸ்பின் லியோ

# குப்பையைப்பற்றிய தெளிவு தேவை

“துணிப்பை பிரசாரகர்” என்ற புனைப்பெயருடன் “இந்து தமிழ் திசை” இணைய இதழில் எழுதிவரும் கிருஷ்ணன் அவர்கள், நாம் தூக்கியெறியும் குப்பையைக் குறித்து பதிவு செய்துள்ள ஒரு கட்டுரையைத் தழுவி எழுந்த சில எண்ணங்கள்...

குப்பையை எங்கே கொட்டுவது? - யாராவது ஒருவரை நிறுத்தி, இந்தக் கேள்வியைக் கேட்டால்... இதெல்லாம் ஒரு கேள்வியா, சாலையின் ஓரத்தில் எங்கு குப்பை சேர்ந்துள்ளதோ, அங்கு கொட்டலாம். குப்பைத் தொட்டியில் கொட்டலாம். வீட்டுக்குப் பக்கத்தில் ஏதாவது காலி மனையில் கொட்டலாம். குளங்களிலோ, ஆற்றிலோ கொட்டலாம். ஊருக்குள் ஓடும், அல்லது தேங்கிக்கிடக்கும் சாக்கடையில் கொட்டலாம்... என்று பல பதில்கள் எழும். நம் கையையும், வீட்டையும் விட்டு குப்பை ஒழிந்தால் போதும் என்பதே, நம்மிடையே பரவலாக காணப்படும் மனநிலை. நாம் அக்கறையின்றி எறியும் குப்பை, நாம் வாழும் சூழலுக்கே பிரச்சனையாக மாறுகிறது.

உலக அதிசயங்களில் ஒன்றாக, இந்தியாவின் பெருமையாக விளங்குவது, எவரெஸ்ட் சிகரம். அச்சிகரத்தை அடைவதற்குச் செல்லும் மனிதர்கள், வழியில் தூக்கியெறியும் குப்பைகளும், மனிதக் கழிவுகளும் இமயமலைப் பகுதியையே ஒரு பெரும் குப்பை மலையாக மாற்றிவருகிறது என்ற கவலை எழுந்துள்ளது. அண்மையில், நேபாள அரசு, இமயமலையில் மேற்கொண்ட ஒரு முயற்சியால், 12 டன் கழிவுகளும், நான்கு சடலங்களும் அகற்றப்பட்டன என்று, கூறியுள்ளன.

நாம் தூக்கியெறியும் குப்பை, மக்கக்கூடிய குப்பையாக இருந்தால், பிரச்சனைகள் எழாது. ஆனால், நாம் தூக்கியெறியும் குப்பையில், நெகிழியும், நச்சு கலந்த வேதியியல் பொருள்களும் உள்ளன. எனவே, குப்பையைப்பற்றிய தெளிவு, நமக்கும், நம் சந்ததியருக்கும் பெரும் உதவியாக இருக்கும். நாம் தூக்கியெறியும் குப்பையில், கீழ்கண்ட பிரிவுகள் உள்ளன:

**மக்கும்தன்மை கொண்ட குப்பை**

- காய்கறிக் கழிவுகள், உணவு, பழம், இலைகள்...

**மறுசுழற்சி செய்யக்கூடிய குப்பை**

- காகிதம், கண்ணாடி, உலோகங்கள், ஒரு சில வகையான நெகிழிப் பொருள்கள்



**நச்சுத்தன்மை கொண்ட குப்பை**

- மருந்துகள், வேதிப்பொருள்கள்

மக்கும்தன்மை கொண்ட குப்பையை, மண்ணுக்கு உரமாக்கலாம் மறுசுழற்சி செய்யக்-கூடியப் பொருள்களை, மீண்டும் பயன்படும் பொருள்களாக்கிவிடலாம். நச்சுத்தன்மை கொண்ட பொருள்களின் நச்சுத்தன்மையை நீக்கியபின், அவற்றை மறுசுழற்சி செய்யலாம். இவை எதிலும் சேராத ஒரு சில பொருள்களையே நாம் தூக்கியெறிய வேண்டும். ஒவ்வொருவரும் பொறுப்புடன் குப்பையை இவ்வாறு கையாண்டால், நம் தெருக்களில் சேரும் குப்பை, நான்கில் ஒரு பங்காகக் குறையும் நம் நல வாழ்வோ, நான்கு மடங்காக உயரும். (இந்து தமிழ் திசை)

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
16 ஆனி, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# பன்மையில் ஒருமையைக் குறித்துக் காட்டும் மூவொரு இறைவன் நமக்கு ஒற்றுமையின் சின்னம்

கத்தோலிக்க திருச்சபையானது வருகின்ற ஞாயிறை அதாவது 16.06.2019 அன்று மூவொரு இறைவன் பெருவிழாவை கொண்டாடுகின்றது. இன்று பலருக்கும் ஒரு புதிராக இருப்பதுதான் இந்த மூவொரு இறைவன். இதனைத்தான் மறைபொருள் என்று நாம் கூறுகின்றோம். மூவொரு இறைவன் என்பது தந்தை, மகன், தூய ஆவி. இவர்கள் மூவரும் மூன்று ஆட்கள். அதாவது இவர்கள் மூவரும் ஆட்த்தன்மையில் வேறாக இருந்தாலும் ஒரே கடவுளாக இருக்கிறார்கள். “மூவொரு இறைவனே ஒரு குடும்பமாகத்தான் இருக்கிறார். அவர் தந்யையாகவும், மகனாகவும், தூய ஆவியாகவும் செயலாற்றுகிறார். தந்தை மகனை நிறைவு செய்கிறார். மகன் தந்தையை நிறைவு செய்கிறார். தூய ஆவி இருவரையும் நிறைவு செய்கிறார். இந்த உறவுகள் இணைப்பக்கத்தை ஒரு குடும்பத்திற்கு ஒப்பிடலாம். ஒவ்வொரு குடும்பத்தையும் மூவொரு கடவுளின் பிரதிபலிப்பு” என்கிறோம். (இ.உ.தி.47/49) இங்கு உண்மையில் ஒற்றுமை தெரிகிறது. இறைவன் மூன்று ஆட்களாக அன்பின் நிறைவில் ஒன்றுபட்டு ஒப்பற்ற ஒரு குடும்பமாக இருக்கின்றார். இந்த இணையற்ற அன்பின் தொடர்ச்சியே குடும்பம்.

அணைத்துக்கொள்ள ஒரு தாய். அன்பு காட்டி திருத்த ஒரு தந்தை. உறுதுணையாக நிற்கும் உடன் பிறந்தோர். இவர்களைக் கொண்டதுதான் குடும்பம். இது இறைவனின் மாபெரும் கொடை. பெற்றோரின் பரிவுமிக்க பாசமும் உடன் பிறந்தாரின் அரவணைப்பும் கிடைத்துவிட்டாலே அக்குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்து காணப்படும். அங்குதான் இறையன்பு உணரப்படுகின்றது. அக்குடும்பம் தான் அன்பின் கருவூலமாகின்றது. இதே ஒற்றுமை இன்று எமது குடும்பங்களில் இருக்கின்றதா என சிந்திக்க நம்மை அழைக்கும் காலம் இது எனலாம்.

குடும்பங்கள் பிரகாசிக்க வேண்டுமானால் பெற்றோரிடையே புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை விட்டுக்கொடுத்தல், மன்னித்து ஏற்றுக்கொள்ளல் போன்ற நற்குணங்கள் இருக்கவேண்டும். ஆக மூவொரு இறைவனில் தங்கி வாழும் குடும்பமே சவால்களைச் சந்திக்கும் குடும்பமாக, வெற்றி நடைபோடும் குடும்பமாக இருக்கும். அக்குடும்பத்தில்தான் அன்பு மேலோங்கி மகிழ்ச்சி பொங்கி வழியும். இதற்கு நல்லதொரு உதாரணமாக திகழ்வதுதான் தூய திருக்குடும்பம்.

ஆனால் இன்று நற்குணங்களைக் கொண்டிராத பல குடும்பங்களில் பெற்றோர் பிரிந்து வாழ்வதும், பிள்ளைகள் பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் இல்லாமலும் அங்குமிங்குமாக சிதறிச் சென்று வாழ்வதும், சகோதரர்களிடையே எத்தனை விரிசல்கள் பூசல்கள். இவை அனைத்தும் சமுதாயத்தில் கண்கூடாகப் நாம் நாளாந்தம் காணும் நிகழ்வுகளாக இருக்கின்றன. இவைகளுக்கான காரணங்களை நாம் தேட ஆரம்பித்துவிட்டால், இக்குடும்பங்களில் செப வாழ்வு இருக்காது. அன்பு வாழ்வு என்றால் என்னவென்று தெரியாது. நற்குணங்களுக்கு இடமிருக்காது. தினமும் வீண் சண்டைகளும் சச்சரவுகளும், போட்டியும் பொறாமையும்தான் நிறைந்து காணப்படும். எமது குடும்பங்கள் திருக்குடும்பத்தைப் பிரதிபலிப்பதாக இருக்குமேயானால் அன்பு மட்டுமே மேலோங்கி காணப்படும்.

பன்மையில் ஒருமையைக் குறித்துக் காட்டும் மூவொரு இறைவன் நமக்கு ஒற்றுமையின் சின்னமாக இருக்கின்றனர். “இனி யூதறென்றும் கிரேக்கறென்றும் இல்லை. அடிமை என்றும் உரிமை குடிமகனென்றும் இல்லை. கிறிஸ்து இயேசு-வுக்குள் அனைவரும் ஒருவரே” என்று புனித பவுலின் வார்த்தைகளுக்கேற்ப நம்மில் எத்தனையோ வேறுபாடுகள் இருந்தாலும், நம்மில் எத்தனையோ வித்தியாசங்கள் இருந்தாலும் அவைகளையெல்லாம் களைந்துவிட்டு ஒன்றாய் ஒற்றுமையாய் ஒருமனப்பட்டு வாழவேண்டும் என அழைத்து நிற்பதுதான் மூவொரு இறைவன் நமக்குத் தரும் பாடம். மேலும் இம்மாதத்தில் தான் நாம் இயேசுவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா மற்றும் இயேசுவின் திருஇருதயப் பெருவிழா ஆகியவற்றைக் கொண்டாடுகின்றோம்.

இறையாசீருடன் ஆசிரியர்



# மூவொரு கடவுள் பெருவிழா

## மூவொரு இறைவன் யார்?

✠ மோசே காலத்தில் மாபெரும் செயல்களைப் புரிந்தவரே தந்தையாகிய இறைவன்.

✠ எப்படிப்பட்ட கட்டளைகளைப் பின்பற்றி வாழவேண்டும் என்பதை கற்பித்தவர் மகன் இயேசு

✠ நம்மை கடவுளின் பிள்ளையாக்கி இன்று வழிநடத்தி வருபவர் தூய ஆவியார்.

இவ்வாறாக தந்தையின் அன்பும், ஆவியின் நட்புறவும், இயேசுவின் அருளும் நம்மை ஒன்றிணைந்த அன்புச் சமூகமாக உருவாக்குகின்றது.

## மூவொரு இறைவனால் நமக்குக் கிடைக்கும் வரங்கள்

✠ நமக்குள் அதிசயங்கள் நிகழும்

✠ நாம் எப்படி வாழவேண்டும் என்ற உண்மை நமக்கு விளங்கும்

✠ நாம் கடவுளின் மக்களாகும் பேற்றினைப் பெறுவோம்.

மூவொரு இறைவனின் அரவணைப்பை நாம் எப்படி பெற முடியும்? அதை நாம் அன்பின் மூலமாகத்தான் பெற முடியும். இந்த அனுபவத்தை கொடுப்பவர் பரிசுத்த ஆவி

இன்றைய காலகட்டத்திலே நமது நாட்டின் சூழ்நிலையை நாம் அவதானிக்கின்றோம். இன்றைய நாட்களில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும், நிகழ்வுகள் பற்றிய உண்மைகளை நாம் முழுமையாக அறிய வேண்டியவர்களாக இருக்கின்றோம். உண்மைகளைக் கண்டு கொண்டாலும், அதற்கு மேலாக எந்த மாற்று நடவடிக்கைகளையும் நம்மால் எடுக்க முடியாது என்பதையும் நாம் அறிவோம். இன்று நம் நாட்டின் மாபெரும் மாயையின் வலைப்பின்னலுக்குள் சிக்குண்டவர்களாக இருக்கின்றோம். இவற்றிலிருந்து நாம் எப்படி மீட்டெழுவது, நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் நம்மில் விதைக்கும் மூவொரு கடவுளின் விழாவைக் கொண்டாடும் நாம் உண்மையை நமக்கு உணர்த்துகின்ற, வெளிப்படுத்துகின்ற அந்த தூய ஆவியை நோக்கிட தனித்தும், குழுக்களாயும், உருக்கமாக மன்றாடுவது இன்றைய காலகட்டத்தில் மிகவும் அவசியமானதாகும். தூய ஆவியானவரிடமிருந்து கற்றுக் கொள்வதற்கு நாம் மனோபக்குவம் உள்ளவர்களாக விளங்க வேண்டும். உண்மையை கற்பிக்கும், அந்த



ஆவியானவருக்காக நாம் காத்திருக்க வேண்டும். நாம் நம் பங்கிலும், அன்பியங்களிலும், திருச்சபையிலும் பணியாற்றும் இடங்கிலும் நம்மிடமுள்ள சாதிய பிளவுகளைக் கழைந்து ஆண்டவர் இயேசுவைப் போலவும் அன்னை மரியாளைப் போலவும், ஆவியானவரோடு ஒத்துழைக்கவேண்டும். பல்வேறு துன்பங்கள், சிலுவைகள் வழியாகவே நம் பயணத்தில்தான் நம் சம்பாவனையை, வெற்றியை அடையமுடியும். அதற்கு அன்பாய் இருக்கும் மூவொரு கடவுளின் மக்களாக ஒற்றுமையுடனும், சமத்துவத்துடனும், சகோதரத்துவத்துடனும் வாழ்வோம். இதற்கு மூவொரு இறைவனாகிய தந்தையின் அன்பும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும், தூய ஆவியாரின் நட்புறவையும் வேண்டுவோம்.

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் குருக்களுக்கான புதிய நியமனங்கள் – 2019

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களால் இந்நியமனங்கள் 01.06.2019 அன்று சனிக்கிழமை வழங்கப்பட்டன. இவை 15.06.2019 தொடக்கம் அமுலாகும்.

## புதிதாக திருநிலைப்படுத்தப்பட்ட அருட்தந்தையர்கள் [உதவிப்பங்குத்தந்தை]

**அருட்தந்தையர்களின் பெயர்கள் — பங்கு**

01. அருட்தந்தை. அஷிந்த ரெக்ஷி நிமல் சில்வாபுள்ளே வத்தளை
02. அருட்தந்தை. ஷெரோன் யசிஸ் ஸ்ரீ பர்னாந்து அங்கத்தவர் புனித செபஸ்தியார் கல்லூரி, மொறட்டுவ
03. அருட்தந்தை. அருண கிளமன்ட் பர்னாந்து கந்தவளை
04. அருட்தந்தை. இசுரு லக்பிரிய சில்வா கிம்புளபிட்டிய
05. அருட்தந்தை. அசித் ஷாமர சமரதுங்க கொட்டாஞ்சேனை
06. அருட்தந்தை. ஜூட் டுவான் சஜித் ஒஸ்மன் ராகமை
07. அருட்தந்தை. அமில மதுசாந் பீரிஸ் வில்லோரவத்தை
08. அருட்தந்தை. டொன் பிரியஷாந் அரவிந்த மொறட்டுவ
09. அருட்தந்தை. கயான் இந்திரஜித் டீ சில்வா போப்பிட்டிய
10. அருட்தந்தை. ஜூட் ஷாலிந்திர கொட்டிகாவத்த அங்கத்தவர் புனித ஜூட் கல்லூரி

## உதவிப் பங்குத் தந்தையர்கள்

01. அருட்தந்தை. மனோஜ் குமார் பர்னாந்து - பெரியதெரு
02. அருட்தந்தை. புத்திக்க தனஞ்சய ஜயமான்ன - பிட்டிப்பன
03. அருட்தந்தை. ரேஷ்மி சுரேஷ் சிந்தக்க - லியனகேமுள்ள
04. அருட்தந்தை. ரங்க ஷெஹான் அந்ராடி - ஹப்புகொட
05. அருட்தந்தை. விக்கும் அன்டன் குமார - நாகொட
06. அருட்தந்தை. கிஹான் நிலுஷன் பர்னாந்து - நாயக்கந்த, வத்தளை
07. அருட்தந்தை. நிமேஷ் கிரிஷான் டி சில்வா - கோட்டை
08. அருட்தந்தை. கிறிஷானக்க டிலான் பெரேரா - ராகமை
09. அருட்தந்தை. சுராஜ் கயஷான் பீரீஸ் - களனிய
10. அருட்தந்தை. சமிர சுதர்ஷன ரொட்றிக்கோ - தேவத்தை
11. அருட்தந்தை. ஜோசப் சுராஜ் பர்னாந்து - புதுச்செட்டித்தெரு
12. அருட்தந்தை. ரவிந்திர குமார் பீரிஸ் - வெள்ளவத்தை
13. அருட்தந்தை. டொன் ஜானக்க ஜயமால் - கொம்பனித்தெரு
14. அருட்தந்தை. ஜெரால்ட்கிறிஸ்டி வோள்ட் ப்(க) பெரேய்ரா - ராகமை
15. அருட்தந்தை. சமில் சமீர - கடலானை
16. அருட்தந்தை. தொன் சஞ்சீவ அப்புஹாமி - களமுள்ளை
17. அருட்தந்தை. கிஹான் பிரியசாந்த பீரிஸ் - வக
18. அருட்தந்தை. யேசுராஜ் சில்வா (IVD) - கிரான்பாஸ்
19. அருட்தந்தை. சசித்த கெலும் ஜயலத் - கட்டுவாபிட்டிய
20. அருட்தந்தை. நிலந்த ரஞ்சுல பர்னாந்து - பன்னிப்பிட்டிய

## கடற்கரையோர பங்குகள்

01. அருட்தந்தை. சாந்த சாகர ஹெட்டியாராச்சி ஒருங்கிணைப்பாளர்

## பங்குத்தந்தையர்கள் – நியமிக்கப்பட்ட பங்குகள்

01. அதி.வண. அருட்பணி. பேட்ரம் ரஞ்சித் - களனிய
02. அதி.வண. அருட்பணி. மனோகுமரன் நாகரட்ணம் - புதுச்செட்டித்தெரு
03. அருட்தந்தை. சரத் நிமல் அபயசிறிவர்த்தனா - தளுபொத்த
04. அருட்தந்தை. சுமித் ரொஷான் ரொட்றிக்கோ - பலங்கத்துறை
05. அருட்தந்தை. ரஷிக இவன்ஸ் குரே - கட்டுவ
06. அருட்தந்தை. சிறிலால் பொன்சேக்கா - தில்லந்துவ
07. அருட்தந்தை. மஞ்சுள நிரோஷன் பர்னாந்து - கட்டுவபிட்டிய
08. அருட்தந்தை. சுனில் குமார் பீரிஸ் - பன்டாரவத்தை
09. அருட்தந்தை. ஜூட் லக்ஸ்மன் - கிம்புளப்பிட்டிய
10. அருட்தந்தை. ரவீன் சந்திரஸ்ரீ பெரேரா - ஹல்பே
11. அருட்தந்தை. அன்டன் பிரேமலால் - வெலிகேன
12. அருட்தந்தை. ரஷிக லோரன்ஸ் டி சில்வா - படல்கம
13. அருட்தந்தை. சுமித் குமாரா பர்னாந்து - தெயகத்த
14. அருட்தந்தை. சுதத் சில்வா - டெலறத்துறை
15. அருட்தந்தை. நிஷாந்த றொட்றிக்கோ - கந்தானை
16. அருட்தந்தை. அமில் கோமிஸ் - உஸ்வட்டகெய்யாம
17. அருட்தந்தை. டெரன்ஸ் பர்னாந்து - மிதெல்லவிட்ட
18. அருட்தந்தை. ரொஹான் டி அல்விஸ் - கடவத்தை
19. அருட்தந்தை. சுரன் அட்டிடியா - சபுகஸ்கந்த
20. அருட்தந்தை. கலன பீரிஸ் - கிராண்பாஸ்
21. அருட்தந்தை. கிளமென்ட் ரொசாய்ரோ - வெள்ளவத்தை
22. அருட்தந்தை. அன்ரன் சமன் ஹெட்டியாராச்சி - கல்கிசை
23. அருட்தந்தை. ஜூட் டெனிசன் - கொலன்னாவை
24. அருட்தந்தை. சமன் மக்சிமஸ் - நூகோட
25. அருட்தந்தை. அனுர சில்வெஸ்டர் பெரேரா - பன்னிப்பிட்டிய
26. அருட்தந்தை. துசித்த பிரதீப் பர்னாந்து - கடலானை
27. அருட்தந்தை. அஜித் அப்புஹாமி - கெரவல
28. அருட்தந்தை. சஞ்சீவ பெரேரா - பானந்துறை
29. அருட்தந்தை. குளோட் மார்ட்டினஸ் வனசிங்ஹ - களுத்துறை
30. அருட்தந்தை. நிர்மல் மாலக்க சில்வா - பயகலை
31. அருட்தந்தை. அருளானந்தம் உதயதாஸ் - மத்துகம
32. அருட்தந்தை. ஷெஹான் இந்திக்க - மொறகொட
33. அருட்தந்தை. பற்றிக் ரொஷான் பர்னாந்து - வெலிவேரிய
34. அருட்தந்தை. பிரசாத் இந்திக்க பெரேரா - புறுலப்பிட்டிய
35. அருட்தந்தை. ஹிருல் ஜயனத் சில்வா - நிட்டம்புவ
36. அருட்தந்தை. கிங்கிலி ஜவன் அப்புஹாமி - பெரிய தெரு
37. அருட்தந்தை. லங்கா தேசப்பிரிய TOR - மக்கோன
38. அருட்தந்தை. நிலந்த எரிக் விக்கிரம - கட்டுக்குருந்த, மொறட்டுவ
39. அருட்தந்தை. சாந்த சாகர ஹெட்டியாராச்சி - பமுனுகம

## புதிய பங்குகளுக்கான பங்குத்தந்தையர்கள்.

01. அருட்தந்தை. தினுஷ் கயான் வின்ஸ்டன் உடம்பிட்ட
02. அருட்தந்தை. சானக்க பிரபாத் வெலிகடராயாச்சி ஏக்கல
03. அருட்தந்தை. தினேஷ் அப்புஹாமி ஏக்கித்த
04. அருட்தந்தை. துலிப் கமல் பிரியசாந்த டயலகொட
05. அருட்தந்தை. ரொஷான் ஷமிந்த பர்னாந்து தூவ
06. அருட்தந்தை. லலித் கிறிஷாந்த திசேர மோதர
07. அருட்தந்தை. கசுன் இஷார பர்னாந்து துங்கல்பிட்டிய

## உயர்கல்வி நிலையங்கள் — நியமனம் பெற்ற இடங்கள்

01. அருட்தந்தை. பிரகாஷ் பர்னாந்து - அங்கத்தவர் - சுபோதி நிறுவனம், பிலியந்தல
02. அருட்தந்தை. நுவன் நிலங்க றொவெல் - அங்கத்தவர் - 16ம் ஆசீர்வாதப்பர் கத்தோலிக்க உயர்கல்வி நிறுவனம்

## கல்லூரிகள் — நியமனம் பெற்ற இடங்கள்

01. அருட்தந்தை. ரஞ்சித் அன்ராடி - இயக்குனர் - புனித சூசையப்பர் கல்லூரி, மருதானை
02. அருட்தந்தை. றொகித்த ரொட்றிக்கோ - இயக்குனர் புனித பேதுரு கல்லூரி, பம்பிலப்பிட்டிய
03. அருட்தந்தை. அன்ரன் ரஞ்சித் - இயக்குனர் - புனித செபஸ்தியார் கல்லூரி, மொறட்டுவை
04. அருட்தந்தை. ஜெயசாந்த சோபிஸ் - இயக்குனர் தூய திருச்சிலுவை கல்லூரி, களுத்துறை
05. அருட்தந்தை. கால்டன் டி சில்வா - அதிபர் - புனித சூசையப்பர் கல்லூரி, கடல்கலே
06. அருட்தந்தை.S.A.D. கிறிஷாந்த குமார் - அதிபர் - புனித பேதுரு கல்லூரி, உடுகம்பொல
07. அருட்தந்தை. தயா தர்ஷன பெரேரா - அதிபர் - புனித ஜூட் கல்லூரி, நீர்கொழும்பு
08. அருட்தந்தை. அந்தனி லக்ஸ்மன் - அதிபர் - புனித நிக்கோலஸ் சர்வதேச பாடசாலை, நீர்கொழும்பு
09. அருட்தந்தை. ரூவான் தேசப்பிரிய - துணை இயக்குனர் - புனித. சூசையப்பர் கல்லூரி, மருதானை
10. அருட்தந்தை. பிரியான் சுபாஸன திசேர - அங்கத்தவர் - தூய சூசையப்பர் கல்லூரி, மருதானை
11. அருட்தந்தை. சமித் குமார் நிட்டியசிங்க - அங்கத்தவர் - ஆன்மீக ஒருங்கிணைப்பாளர், புனித சூசையப்பர் கல்லூரி, மருதானை
12. அருட்தந்தை மிலான் அசந்த பேனாட் - அங்கத்தவர் - புனித பேதுரு கல்லூரி, பம்பிலப்பிட்டிய
13. அருட்தந்தை. இம்மானுவேல் ஜிப்சன் பர்னாந்து - அங்கத்தவர் - ஆன்மீக ஒருங்கமைப்பாளர், புனித பேதுரு கல்லூரி, பம்பிலப்பிட்டிய
14. அருட்தந்தை. சமேஸ் அன்ரனி வால்சிங் - அங்கத்தவர் - புனித செபஸ்தியார் கல்லூரி, மொறட்டுவ
15. அருட்தந்தை. சமித் ரங்கன பர்னாந்து - அங்கத்தவர் - லொயாலா கல்லூரி, நீர்கொழும்பு
16. அருட்தந்தை. திலின பதும் பர்னாந்து - அங்கத்தவர் - புனித சூசையப்பர் கல்லூரி, எந்தரேமுல்லை
17. அருட்தந்தை சஜித் அனுர - அங்கத்தவர் - புனித சூசையப்பர் கல்லூரி, கடோல்கலே
18. அருட்தந்தை. ராஜ் பற்றிக் சில்வா - அங்கத்தவர் புனித செபஸ்தியார் கல்லூரி, மொறட்டுவ

## அரசாங்க பாடசாலைகள்

01. அருட்தந்தை. செராட் ஜெயவர்த்தன - அங்கத்தவர், புனித மரியாள் பாடசாலை, வத்தளை (தங்குமிடம் புனித செபஸ்தியார் ஆலயம், அங்கொட)
02. அருட்தந்தை. ஹோசன் சஜித்திர பெரேரா - அங்கத்தவர் - புனித டிலாசால் கல்லூரி, மோதர (தங்குமிடம் புனித யாகப்பர் ஆலயத்தில்)
03. அருட்தந்தை. அன்டன் சுரங்க வர்ணகுலசூரிய - அங்கதத்வர் - டொன் பொஸ்கோ கல்லூரி, களுஅக்கல (தங்குமிடம் அங்வெல பங்கு)
04. ரூவான் சத்துரங்க பெரேரா - அங்கத்தவர் - புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை (தங்குமிடம் கரவலப்பிட்டிய பங்கு)

## மறைமாவட்ட இயக்குனர்கள் மற்றும் அப்போஸ்தலிக்க ஒருங்கமைப்பாளர்கள்.

01. அருட்தந்தை. ஜூட் கிறிசாந்த பர்னாந்து - இயக்குனர் - உயர்மறைமாவட்ட சமூக தொடர்பாடல் (அப்போஸ்தலிக்க பல்கலைக்கழகம்)
02. அருட்தந்தை. லெஸ்ரர் விஜயசூரிய - கொழும்பு உயர்மறைமாவட்ட ஒருங்கமைப்பாளர் (YCS) (தங்குமிடம் பமுனுவில)
03. அருட்தந்தை. மாரியஸ் கிறிஷான் பீரிஸ்- அங்கத்தவர் - அருட்பணி. ஜூட் பேனாட் - போதை மருந்துக்கு அடிமையானவர்களுக்கானது (தங்குமிடம் - மிதுமா மையம்)
04. அருட்பணி. கமிலஸ் பர்னாந்து - இயக்குனர் - மெசஞ்சர் பத்திரிகை, கத்தோலிக்க அச்சகம். மற்றும் ஞானர்த்த பிரதீப்பய பத்திரிகை
05. அருட்தந்தை நேயல் சம்பத் பெரேரா - தனியார் மருத்துவமனை ஆன்மீகக் குரு (தங்குமிடம் ஆயர் இல்லம்)
06. அருட்தந்தை. பிரசாத் பொன்னம்பெரும - அப்போஸ்தலிக்க நோயாளர், தேவத்தை
07. அருட்தந்தை. ரொபின்சன் விஜயசிங்க - ஆன்ம இயக்குனர், கிற்புபுதுவ
08. அருட்தந்தை. சமிந்து பத்தும் - அங்கத்தவர் செத்சரண (தங்குமிடம் ஆயர் இல்லம்)

## விசுவாச உயிரூட்டல் குழு

01. அருட்தந்தை. அசித்த நிரஞ்சன் பர்னாந்து
02. அருட்தந்தை. ஜூட் அசித்த ஹொட்டியாராச்சி

## குருமடங்கள்

01. அருட்தந்தை. இரங்க லக்சிந்த சில்வா - அங்கத்தவர் தஹாம் செவன, களுத்துறை
02. அருட்தந்தை. அன்சலம் சிரான் - இயக்குனர் - மாதம்பே
03. இந்திரஜித் பெரேரா - அங்கத்தவர் தேசிய குருமடம் கண்டி

## வதிவிடக் குருக்கள்

01. அருட்தந்தை. ஜூலியஸ் கிறிஸ்டோபர் - தேவத்தை பங்கு
02. அருட்தந்தை. கீதாலி அனஸ்லி - பம்புக்குளிய ஆலயம்
03. அருட்தந்தை. ஒகஸ்டீன் பர்னாந்துபுள்ளே - செமட்ட சரண, உதவி செக்கடித்தெரு பங்கு
04. அருட்தந்தை. கமுணு டயஸ் - அந்திட்டிய ஆலயம்

15

**தகவல் : செயலாளர் – நிர்வாகம், 01 ஆனி, 2019**



(இளைஞனே விழித்தெழு)

# "எனக்கான கடவுளின் திட்டத்தை பகுத்தறிதல்"

புனித இக்னேஷியாரின் ஆன்மீகத்தில் இருந்து "கடவுளின் திட்டத்தை பகுத்தறிதல்" என்பது பிறக்கின்றது. அதாவது கடவுளின் இறைகுரலுக்கு செவி கொடுத்தல். இறைவனின் குரலுக்குப் பலர் செவி கொடுத்தனர். பலவீனமான பலரை கடவுள் பலமுள்ளவராக்கினார். இறைவனின் குரலை உணர்ந்து கொள்கின்ற போது எனக்கான கடவுளின் திட்டத்தையும் நான் அறிந்து கொள்ளலாம். இளமைப் பருவம் என்பது இறைகுரலுக்கு செவிகொடுக்க அழைக்கும் பருவம். இவ்விளமைப் பருவத்தில் தான் எனது வாழ்வுக்கான திட்டத்தை நான் உணர்ந்து கொள்ள முடியும். கடவுளின் திட்டத்தில் நான் செயற்பட ஒரு பங்கு இருக்கின்றது. காரணம் நாம் கடவுளின் உடன் உழைப்பாளர்கள். இதனால் பல சவால்களுக்கு முன்பே இறைவன் எனக்கான திட்டத்தை வகுத்து வைத்துள்ளார். எனவே நற்செயல்கள் வழியாக புதுப்படைப்புக்களாக மாறி (2 கொரி 5:17) நற்செயல்கள் புரியவும், இதற்காக கடவுளின் கைவேலைப்பாடுகளாக நாம் படைக்கப்பட்டுள்ளோம் (எபேசி 2:10)

இந்த கைவேலைப்பாடுகளுக்குள் நாம் செவிகொடுக்கும் இறைகுரல் தான் எனது இறையழைத்தல். இறையழைத்தல் இறைவனின் உயரிய கொடை. இது இறைவனிடமிருந்து நேரடியாக வருகின்றது. இது கடவுளின் திட்டமேயன்றி வேறெதுவுமில்லை. இதற்-கான இறைவனின் திட்டத்தை அறிவதற்கு நான் தயாராக இருக்கின்றேனா? என்பது தான் எனது கேள்வி. இந்த உலகத்தின் படி நாம் நடந்துகொண்டால் இறைவனின் திட்டத்தை அறிந்து கொள்ள முடியாது. மாறாக உள்ளம் புதுப்பிக்கப்படும் போது நாம் கடவுளின் திட்டத்தை கண்டடைவோம் என்பது உறுதியானது (உரோ 2:12) இதுதான் இறைவனின் திட்டம். இந்த இறையழைத்தலுக்கான எனது பங்கு எவ்வாறு இருக்கின்றது. நான் செவிகொடுக்கின்றேனா? அல்லது அதனை உதாசீனம் செய்கின்றேனா? கடவுளின் திட்டத்தை நான் பூரணமாக பகுத்தறிந்து கொள்ள, நான் எனது இதயத்தை முழுமையாக்கி நிற்கவேண்டும். ஒருமுறை அதனை நான் உணர்ந்து கொண்டால், கடவுள் தந்த அழைப்பையும், அருட்கொடைகளையும் அவர் மீண்டும் பெறுவதில்லை என்பதும் அவர் கொடுக்கும் உறுதி" (உரோ 11:29)

**எனது அழைத்தலை பகுத்தறிய 3 வழிகள்**

1. இறைவார்த்தைக்கு என்னை முழுமையாக அர்ப்பணித்தல்
2. என்னைப் பற்றிய உண்மைத்தன்மையை அறிந்து கொள்ளல்.
3. உலகப்போக்கினை அறிந்து கொள்ளல்.

இந்த மூன்று வழிகளையும் நான் பின்பற்றிக் கொண்டால், என்னுடைய வாழ்க்கையில் கடவுளின் திட்டத்தை அறிந்துகொள்ள ஒரு தொடக்கமாக அமையும். இந்த தெளிவான தொடக்கம் தான் இறைவனின் திட்டத்தில் நான் யார்? என்பதை பிரதிபலிக்கும்.

"உயர்ந்த பகுத்தறிவு" என்பது மிகவும் தெளிவானது. இதனை தடுப்பதற்காக பல வழிகளும் ஒருவரின் வாழ்வில் இணைந்து கொண்டே இருக்கும். காரணம் நன்மையை விட தீமையானது வெகு விரைவில் பயணிக்கின்றது. ஒரே நபரிடமிருந்தே இந்த நன்மையும், தீமையும் பிறக்கின்றது. காரணம் இன்றைய உலகில் நன்மையை விட தீமையே அதிக ஆதிக்கம் செலுத்துகின்றது. தீமைக்கு எதிராக நான் பயணிக்கும்போது எனது திட்டம் எது என்பதை இறைவன் இலகுவாக வெளிப்படுத்துவார்.

எனவே இளைஞர்களே இறைவனின் திட்டத்தை இலகுவாக அறிந்து கொள்ளமுடியாது. எனது வாழ்வை முழுமையாக அவருடைய குரலுக்கு செவி கொடுக்க செய்யும்போது இறைவனின் திட்டத்தை இலகுவாக அறிந்து கொள்ளலாம். இன்றைய உலகில் இறையழைத்தல்கள் குறைந்து செல்வதற்கான பிரதான காரணம் இறைகுரலுக்கு செவிகொடுக்காமையே. திட நம்பிக்கை, மனமாற்றம், பொறுப்பு இந்த மூன்றுமே எமது வாழ்வினை நம்பிக்கையுடன் வாழ இட்டுச் செல்லும் காரணிகளாக இருக்கின்றன. எனவே இளைஞனே, யுவதியே இந்த ஆண்டு சிறப்பாக உங்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஆண்டு. தனிச் செபத்திலும், நற்கருணை வாழ்விலும், திருச்செபமாலை செபிப்பதிலும், நிலைத்திருந்து இறைவனின் குரலுக்கு செவிகொடுக்க உங்களை ஆயத்தமாக்குங்கள். கல்வாரியில் இரத்தம் சிந்திய இயேசுவை நோக்கி பார்வையை திருப்புங்கள். எனவே பின்வருவனவற்றை வாழ்வின் குறிக்கோள்களாக கொள்ளுங்கள்.

சகோ. பெ. டிலோய்ட்சன் பெர்னான்டோ,
தேசிய குருமடம், கண்டி.

1. கவனமாக கவனியுங்கள்
2. அறிவுப்பூர்வமாக சிந்தியுங்கள்
3. நியாயமாக தீர்ப்பிடுங்கள்
4. பொறுப்புடன் நடந்து கொள்ளுங்கள்

இதனை வாழ்வாக்குங்கள். அப்போதுதான் இறைவன் நம் வாழ்வின் வழியாவார். அவரின் பிள்ளைகளாக அவரது குரலுக்கு செவிகொடுத்து விழித்தெழ முடியும்.

**விழித்தெழுவோம் வாழ்வை அர்ப்பணிப்போம்.**
**"ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்தால் என்ன பயன்"**




சென்ற இதழின் தொடர்ச்சி



# முரண்பாடுகள்

**தீமைகள்**

இத்தகைய முரண்பாடுகள் சமுதாயத்திலே பல தீமைகளை விளைவிக்கின்றன. சாலமோன் அரசன் காலத்தில் இருந்தே இத்தகைய முரண்பாடுகள் தென்படுகின்றன. ரோபோவாம் ரெகொபோவாம் இருவரும் முரண்பாடுகளினால் தம் நாட்டையே கூறு போட்டுவிட்டனர்.

இரு உலகப் போர்கள் இத்தகைய முரண்பாட்டால் ஏற்பட்ட விளைவுகள் என்றால் மிகையாகாது. குறிப்பாக, இரண்டாம் உலகப் போர் இத்தகைய முரண்பாட்டால் ஏற்பட்டதுதான். தான் மட்டுமே உயர்ந்தவன் தனது இனம்தான் உயர்ந்த இனம் மற்றவர்கள் அழிய வேண்டுமென ஹிட்லர் திட்டமிட்டார். ஹிட்லர் தமது வெறிச் செயலால் ஜெர்மனியருக்கு மிகுந்த கொடுமையைச் செய்துள்ளார்.

16ஆம் நூற்றாண்டிலே ஜெர்மனியில் மார்டின் லூத்தர் தமது முரண்பாட்டால் பிளவு உண்டாக்கினார். அவர் அன்று உடைத்த கிறிஸ்தவ மறை இன்றும் பல்வேறு சிக்கல்களுக்கு அடிமையாகி இணைக்கப்பட முடியாத பிளவுகளாகிக் கொண்டிருக்கின்றது. இதற்கு அடிப்படைக் காரணம் பிளவு என்பதைத் தவிர வேறில்லை.

நமது நாட்டிலே இன்று ஊர்கள் தம் ஒற்றுமையை இழந்து பிரிவினைக்கு உள்ளாகியுள்ளன. இவைகளுக்குக் காரணம் ஆட்சி உறுப்பினர்களிடையே காணப்பட்ட முரண்பாடுகள் தான். சீரான சிந்தனையுடன் இயங்கியிருந்தால் ஒற்றுமை நிலைபெற்றிருக்கும். எதிர்மறையின் திட்டங்கள் தீர்மானங்கள் குறுக்கிட்டமையினால் பல தீமைகள் விளைகின்றன. அத்துடன் சில நன்மைகளும் விளைகின்றன என்பதைக் காண்போம்.

**அ. நன்மைகள்**

மக்கள் யாவரும் வேறுபட்டுக் காணப்படுகின்றனர். அதனால்தான் முரண்பாடுகள் தோன்றுகின்றன. மாறுபட்ட சிந்தனைகளை விளைவிக்கின்றன. இருவர் ஒன்றுபோல் இல்லை. ஒன்றாக இருந்திருந்தால் நன்மைகளை எதிர்பார்த்திருக்க முடியாது. வேறுபாடுகளே மனித நலனுக்கும் மனித வளத்துக்கும் வித்திடுகின்றன.

**ஆ. இனிமை**

வேறுபாடுகளே மனித வாழ்விற்கு இனிமையூட்டுகின்றன. தினமும் ஒரே உணவை நாம் உண்ண முடியாது. வெவ்வேறு மாறுபட்ட உணவையே உண்ணுகிறோம். ஒரே அரிசியானாலுங் கூட அதைப் பல வகையில் இட்லி, தோசை, முறுக்கு, பலகாரம் எனப் பல வகையில் சமைத்து உண்கிறோம். நமது உணவு அரிசி. எனவே வேறுபாடுகள் மனிதன் கல்விக்கும் வழிவகுக்கின்றன.

**இ. கல்வி**

மாணவர்கள் கல்விக்கும் முரண்பாடுகளே அடிப்படை. எல்லாக் கல்வியும் ஒப்பிட்டு வேறுபடுத்தி உண்மையினைக் கண்டுணர்கின்றனர். ஒப்பிடுதல் இல்லையேல் கல்வி இல்லை. முதுகலை வல்லுனர் யார்? இவர் பொருள்களுக்குள் நுட்பமான வேறுபாடுகளை எளிதாகக் கண்டுபிடிப்பவர்கள் என்று பொருள் முரண்பாடுகளே புதுக் கருத்தை உருவாக்குகின்றன.

**ஈ. புதிய கருத்துகள்**

முரண்பாடுகள் காணப்படுவதால் புதிய நுண் கலைகளும், தொழில் நுட்பங்களும் தோன்றுகின்றன. இரு கருத்துகள் ஒன்றோடு ஒன்று மோதும்பொழுதுதான் புதிய கருத்துகள் உருவாக்கப்படுகின்றன. புதிய விதிகளையும் வழிமுறைகளையும் வாழ்வுமுறைகளையும் ஆக்குவிப்பது முரண்பாடு.

**உ. தத்துவம்**

கெகேல் என்பவர் முரண்பாட்டையே தன்னுடைய தத்துவமாக வெளியிட்டுள்ளார். தீசிஸ், ஆன்றி தீசில், சின்தெசிஸ், யூதக்கொள்ளை, எதிர்கொள்கை, இணைக்கொள்கை, யூத மறை, எதிரானது கிரேக்கமறை, இரண்டும் இணைந்தே கிறிஸ்தவ மறையைத் தோற்றுவித்தது. இதன் அடிநிலையில் மறைந்திருப்பது முரண்பாடுகள்.

**ஊ. ஒற்றுமை**

ஒற்றுமைக்கும் வித்திடுவது முரண்பாடுகளே. வேற்றுமை இருந்தால்தான் ஒற்றுமைக்குப் பொருளுண்டு. வேற்றுமையின் மத்தியில்தான் ஒற்றுமை தோன்ற முடியும். வேற்றுமையில் ஒற்றுமை என்று பேசுகிறோம். எனவே வேற்றுமையே (முரண்பாடுகளே) ஒற்றுமையை வலுப்படுத்துகிறது.

**எ. நல்வாழ்வு**

நல்வாழ்விற்கும் வித்திடுவது முரண்பாடுகள். எங்கெல்லாம் பல சாதியினர் குடியிருக்கிறார்களோ அங்கு பங்கு குருவிற்கு அதிகப் பிரச்சினை கிடையாது. ஏனெனில் மக்கள் தங்களுக்குள்ளே மோதிக்கொள்வர். ஆனால் ஒரே சாதியினர் இருக்கிற பங்கில் மக்கள் பங்குத் தந்தையோடு மோதிக் கொள்வதினால் அமைதி குலைகிறது.

**ஏ. சமய வளர்ச்சிக்கு**

சமய வளர்ச்சிக்கும் முரண்பாடுகள் தேவைப்படுகிறது. நெதர்லாண்டை எடுத்துக்கொண்டால் அங்கு அதிகமாக பிரிந்த சகோதரர்கள் வாழ்கின்றனர். அங்குதான் குடிபோதைகளும் பாலுறவுகளும் மிக அதிகமாகப் பெருகியுள்ளன. இதனால் குழப்பங்களும் சண்டை சச்சரவுகளும் பெருகி அமைதியின்றி மக்கள் வாழ்கின்றனர். ஜெர்மனியில் பிரிந்த சகோதரர்களும், கத்தோலிக்கர்களும் வாழ்வதால் பல துறையில் வளர்ச்சியடைந்துள்ளனர். எனவே முரண்பாடுகள் சமய வளர்ச்சிக்கும் வழிவகுக்கின்றன.

**ஐ. பிரச்சினைக்குத் தீர்வு**

முரண்பாடுகளே பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவுகின்றன. இரண்டு பேருக்குள் பிரச்சினை என்றால் மூன்றாவது பிரச்சினையை உண்டாக்க வேண்டும். அப்போது முதல் பிரச்சினைக்கு இயல்பாகத் தீர்வு பிறந்துவிடும்.

தொடரும்



# ஆண்டவரின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழா



நாம் உயிர் வாழ உணவு அவசியம். நாம் உண்ணும் உணவு நமது சரீரமாகவே மாறிவிடுகிறது. உணவைப்போல் வேறு எதுவும் நமது சரீரத்துடன் நெருங்கிய விதமாக ஒன்றிப்பதில்லை. தான் படைத்த எந்த பொருளையும், தம்மை விட நெருங்கிய விதத்தில் நம்மோடு ஒன்றிக்கப்பட நம் ஆண்டவர் விரும்பவில்லை. "நானே வானிலிருந்து இறங்கி வந்த உணவு (யோவா 6:15) என்று கூறிய அவர் அப்ப இரச வடிவில் தம்மையே நம் ஆன்ம உணவாகத் தர திருவுளம் கொண்டார்.

எனது சதையை உணவாகக் கொடுக்கின்றேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன். எனது சதையை உண்டு, என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலை வாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன்" (யோவா 5:51-54) என்றார். முடிவில்லா வாழ்வு என்பது பசியில்லா, குறை-யில்லா நிறை வாழ்வைக் குறிக்கும்.


இயேசு பிறப்பதற்கு முன்னும், கடவுள் மனிதர்-களின் பசியை ஆற்றியதுண்டு. தாகத்தைத் தீர்த்ததுண்டு. பாலைவனத்தில் இஸ்ராயேல் மக்கள் அலைந்து திரிந்தபோது இறைவன் வானத்திலிருந்து மன்னாவைப் பொழிந்து அவர்களது பசியை ஆற்றினார். தாகத்தால் வாடியபோது கற்பாறைகளிலிருந்து நீரருவிகளைப் பெருகச்செய்து அவர்களது தாகத்தை தீர்த்தார். ஆனால் அன்று அளிக்கப்பட்ட மன்னாவாலோ, தண்ணீ-ராலோ மக்களுக்கு நிரந்தர தாகத்தை அளிக்க முடியவில்லை. இயேசு பிறந்தார். நிரந்தர தாகத்தைத் தருவேன் என்றார்! தனது உடலையும், இரத்தத்தையும் மக்களின் பசி தீர்க்கும் ஆனந்தமான, அற்புதமான மருந்தாக்கினார். இன்று இயேசுபெருமான், நற்கருணை வடிவில் நம் ஒவ்வொருவரையும் பார்த்து, "எனதருமை மகளே, எனதருமை மகனே! பாரங்கள் தாங்காமல் நீ சாய்கின்றபோது உனக்கு பாதங்கள் வேண்டுமா? தாகங்கள் தீராமல் நீ ஏங்கும்போது உனக்கு மேகங்கள் வேண்டுமா? பாவங்கள் புயலாகி நீ சாகும்போது உனக்கு பாசங்கள் வேண்டுமா? சோகங்கள் கடலாகி நீ மூழ்கும்போது உனக்கு ஓடங்கள் வேண்டுமா? ஒரே சொல்லில் பசியில்லா வாழ்வை நோக்கி நீ பயணம் செல்ல வேண்டுமா? என்னிடம் வா... வந்து என் உடலை உண்டு. என் இரத்தத்தைக் குடி.

கிறிஸ்துவின் உடலிலும் இரத்தத்திலும் பங்குகொள்ள விரும்புகிறவர்கள் சிலை வழிபாட்டை விட்டு விலகி வேறு எந்த தெய்வத்தோடும் உறவு வைத்துக் கொள்ளாது இயேசு கிறிஸ்துவை மட்டுமே வழிபடவேண்டும்.

விவிலியக் கருத்துப்படி விபச்சாரமும், சிலை வழிபாடும் ஒன்றே. பிற தெய்வத்தைத் தேடி ஓடுவது என்பது இறைவனைப் புறக்கணித்து, விசுவாச வார்த்தைப்பாட்டில் தவறுவதாகும். மனிதன் படைத்த எந்தப் பொருளையும், தன் வாழ்க்கையில் மையமாகக் கொண்டு, அதற்காக வாழ்வது சிலை வழிபாடு. மண், பெண், பொன், பணம், பதவி, பட்டம், பரிசு, அழகு, அந்தஸ்து போன்ற படைப்புப் பொருட்களின் மீது அளவற்ற ஆசை வைத்து இறைவனை மறப்பதுதான் சிலை வழிபாடு.

இப்படிப்பட்ட வழிபாட்டில் இதுவரை ஈடுபட்டிரு-ந்தால், அதைவிட்டு விலகி ஆண்டவராம் இயேசுவே என் தேவன், எனச் சொல்லி அவர் பீடத்தை அணுகி அவரது உடலை உண்டு, இரத்தத்தைப் பருகுவோம். அப்போது படிப்படியாக பசி தீர்வதையும், தாகம் தணிவதையும் நாம் உணர்வோம். இது உண்மை! ஏனென்றால் இது உண்மையே உருவான ஆண்டவரின் அருள்வாக்கு.

## தந்தையர் தினம்



ஆக்கம்: பென்ஜமின் சோமநாதர். தெஹிவளை

படைப்பாளராம் பரம் பொருளின் பிரதி வடிவமாய்
எம்மைப் பாசமாய்ப் பாதுகாக்கும்
தந்தையரைத் தினமும் போற்றிடுவோம்.
துன்பத்தின் நடுவிலும்
தன்னலம் துறந்து, தன் உறக்கம் மறந்து,
தன் கண்ணீரையும் மறைத்து,
தன் தோளில் தினமும் சிலுவை சுமந்து,
உடல் உழைப்பை - வியர்வையாக்கி
எம்மை அனுதினம் வாழ வைக்கும்
வள்ளல் - அவரை
வாயார வாழ்த்துவோம்.
அவலங்களையும்
அழுகைகளையும்,
அமைதியாய் அனுபவித்து,
தன் குடும்பத்தைப்
பாதுகாக்கும்
தந்தையரின்
தன்னலமற்ற தியாகத்தை
தரணி எங்கும்
முழங்குவோம்.



தந்தையர் தின வாழ்த்துக்கள்

## திருத்தந்தை தினம்

# மனங்கவர்ந்த மக்கள் திருத்தந்தை



திருத்தந்தை பிரான்சிஸ் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிமிடம் முதலே தம் எளிமையான வாழ்க்கை முறையாலும், மக்களை மையப்படுத்திய சிந்தனையாலும், மனித நேய அணுகுமுறையாலும், ஒட்டுமொத்த உலக மக்களின் மனங்களில், மனங்கவர்ந்த மக்களின் திருத்தந்தையாக இருக்கின்றார். ஏழை எளிய மக்களின் மனப்பான்மையையும், வாழ்வியல் முறையையும், தம் அன்றாட வாழ்வில் வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கின்றார். அவருடைய எளிய வாழ்வும், போதனையும், நம் அனைவருக்கும் ஒரு கல்விக்கூடமாக அமைந்துள்ளது எனலாம்.

### அவரைப் பற்றி...


ஆர்ஜென்டினாவிலிருந்து ஒரு திருத்தந்தை 1272 ஆண்டுகளுக்குப் பிறகு ஐரோப்பியர் அல்லாத ஒரு திருத்தந்தை இயேசு சபையிலிருந்து வந்தார். இவரின் இயற்பெயர் ஜோர்ஜ் மரியோ பெர்கோக்லியோ. அவர் தேர்ந்துக்கொண்ட பெயர் பிரான்சிஸ்.

இவர் சலேசியப் பள்ளியில் படித்து மறைமா-வட்ட குருமடத்தில் சேர்ந்து சுவாமிநாதர் சபையில் சேர ஆசைப்பட்டு இறுதியில் ஒரு இயேசு சபைத் துறவி-யானார். அதன் பின் ஆர்ஜென்டினிய இயேசு சபையின் மாநிலத் தலைவராக பணியாற்றினார். அதன்பின் சான்மிகுவேலிலுள்ள புனித ஜோஸ் மேக்சிமோ கல்லூரியின் அதிபராகவும், இறையியல் மற்றும் மெய்யியல் துறையில் இறையியல் பேராசிரியராகவும் பணியாற்றினார். 1992 வைகாசி 27 பெயோனஸ் ஓரசின் துணை ஆயராக நியமிக்கப்பட்டு, ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டார்.

2001ல் கர்தினாலாக தகுதி உயர்த்தப்பட்டார். 2013 பங்குனி 13ஆம் திகதி திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டார். திருத்தந்தையாக பொறுப்பேற்ற-திலிருந்து இவரின் வார்த்தையும் செயலும், அணுகு-முறையும் மக்களைக் கவர்ந்தது. இதனால் கத்தோலிக்க திருச்சபையின் மீதிருந்த ஈடுபாட்டை இழந்து கத்தோலிக்க ஆலயத்திற்கு வந்து வழிப்படும் பழக்கத்தையும் பல்லாண்டுகளாக கைவிட்டிருந்த ஆயிரமாயிரம் கத்தோலிக்கர்கள் ஆலயங்களுக்கு திரும்பி வரத் தொடங்கினர். திருச்சபையின் மீதிருந்த ஈடுபாட்டை மட்டுமல்ல நம்பிக்கையையே இழந்து விட்டதால் திருச்சபையை விட்டுப் போயிருந்த பலர் திருத்தந்தை ஏற்படுத்தியுள்ள தாக்கத்தால் திருச்சபைக்கு திரும்பி வந்தனர். ஆயர்மார்களும், அருட்தந்தையர்களும் தங்களுக்குள் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர்.

காரணம், திருத்தந்தையினது சொல்லும், செயலும் மட்டுமல்ல அவரது ஆளுமை, குணநலன்கள், தலைமைத்துவம், நாடு, அதிகாரம், ஆடம்பரம், அரியணையின் தனிமை....

தொடர்ச்சி 15ம் பக்கம்..



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**பேதுரு**

## மூவொரு கடவுள் பெருவிழா (16.06.2019)

**வாசக விளக்கம்:** திருஅவையானது இன்று மூவொரு கடவுள் பெருவிழாவை சிறப்பிக்கின்றது. இது மனிதனின் புரிதலுக்கு அப்பாற்பட்ட மறையுண்மை. கடவுள் ஆள் வகையில் தந்தை, மகன், தூய ஆவி என மூவராய் இருந்தாலும் இறைத்தன்மையில் ஒரே இறைவனாக விளங்குகின்றார் என்பதே நம் அனைவரின் அசைக்க முடியாத விசுவாசம் ஆகும். நிசேயா திருச்சங்கத்தில் மூவொரு இறைவன் கோட்பாடு உறுதி செய்யப்பட்டு நிசேயா விசுவாசப் பிரமாணம் உருவானது. மூவொரு இறைவனின் ஒருமித்த செயற்பாட்டிற்கு திருப்பலியிலே இடம்பெறும் தூய ஆவியின் வருகைக்காக மன்றாடும் செபம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கின்றது. மூவொரு இறைவனின் பெருவிழாவைக் கொண்டாடும் நாம் அவரது மகிமையையும் பெருமையையும் உணர்ந்து அவரை முழு உள்ளத்தோடும், ஆன்மாவோடும், வலிமையோடும் அன்பு செய்யவேண்டும். மூவொரு இறைவனில் இருக்கும் அன்புறவு நம் வாழ்க்கையிலும் பிரதிபலிக்க வேண்டும். இன, மத, மொழி, நிற அடிப்படையில் வேற்றுமை பாராட்டுவது மூவொரு இறைவனுக்கு எதிரான பாவமாகும். ஒற்றுமையில் வாழ இறையருள் வேண்டுவோமாக...

**முதல் வாசகம் : நீ.மொழி 8:22-31**
பூவுலகு உண்டாகும் முன்னே ஞானம் நிலை நிறுத்தப்பெற்றது.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரே உமது பெயர் உலகெங்கும் மேன்மையாய் உள்ளது.

**இரண்டாம் வாசகம் : உரோ 5:1-5**
நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா அல்லேலூயா இருந்தவரும் இருக்கின்றவரும் வரவிருக்கின்றவரும் எல்லாம் வல்லவருமான கடவுள், தந்தை மகன் தூய ஆவியாருக்கு மகிமை உண்டாகுக அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : யோவா 16:12-15**

### விசுவாசிகளின் மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இயேசுவின் திருமுழுக்கின் போது முதன் முதலில் வெளிப்படுத்தப்பட்ட மூவொரு கடவுளின் செயல்பாட்டால் நிரம்பி வழியும் திருஅவையையும் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர், துறவியர், இறைமக்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்து உம் ஒளி நோக்கி வழிநடத்திக் காத்தருள வேண்டுமென்று...

இனத்தால், பேசும் மொழியால், மதத்தால் மனித மாண்பிற்கு ஊறுவிளைவிக்கும் காரணிகளை கண்டறிந்து மனிதத்தின் பேரால் ஒன்றிணைந்து சகோதர அன்பை பின்பற்றி நீதியின் சமூகம் உருவாகவும், வெறுப்பு, பகைமை, பழிவாங்குதல் போன்றவற்றை அகற்றி மூவொரு கடவுளின் ஒருமைப்பாட்டைக் கைக்கொண்டு வாழவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

மூவொரு இறைவனின் மகிமையையும் பெருமையையும் நாம் உணரவும், அவரை முழு உள்ளத்தோடும் ஆன்மாவோடும் வலிமையோடும் அன்பு செய்யவும் மூவொரு இறைவனில் இருக்கும் அன்புறவு நம் வாழ்க்கையில் பிரதிபலிக்கவும், பங்கிலும் பணி செய்யும் இடங்களிலும் ஒற்றுமையுடன் பணி செய்யவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

நாட்டில் தோன்றியுள்ள அசாதாரண சூழ்நிலைகள் மறைந்து அனைவர் மத்தியிலும் அமைதி வாழ்வு மலரவும், சுயநல நோக்கங்களுக்காக மனித வாழ்வை சீர்குலைக்கும் நாசகாரச் செயல்கள் அகன்று போகவும் அனைவரும் தத்தம் சமய விழுமியங்களை அனுசரித்து வாழவும் வரமருள வேண்டுமென்று...

கிறிஸ்தவ மக்களாகிய நாம் அனைவரும் ஒரே பந்தியில் அமர்ந்து இயேசுவின் திருஉடலையும், திரு இரத்தத்தையும் உட்கொள்வதால் அனைவரும் கிறிஸ்துவின் மறையுடலில் உறுப்பினராகி ஒரே குடும்பமாகிறோம் என்ற உண்மையை உணர்ந்தவர்களாக என்றும் ஒற்றுமையுடன் வாழ வரமருள வேண்டுமென்று...

## கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா (23.06.2019)

**வாசக விளக்கம்:** திருஅவையின் மக்களாகிய நாம் இன்று இயேசுவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழாவை கொண்டாடுகின்றோம். இன்றைய பெருவிழா நமக்கு திவ்விய நற்கருணை உடன்படிக்கையின் உணவு, பலி உணவு, உறவின் உணவு, இறைப் பிரசன்னத்தின் உணவு என்ற உண்மைகளை உணர்த்தி நிற்கின்றது. அன்பின் சின்னம், ஒற்றுமையின் அடையாளம், உறவுகளின் சங்கமம் என்றெல்லாம் கருதப்படும் நற்கருணை எமது வாழ்வின் மையமாக விளங்குகின்றது. நற்செய்தியில் இயேசுவும் சீடர்களும் மற்றவர் தேவையில் அக்கறை உள்ளவர்களாக இருப்பதுபோல நாமும் மற்றவர் நலனில் அக்கறை உள்ளவர்களாக வாழவேண்டும். மக்களிடையே ஒற்றுமையும் சமாதானமும் வளர நாமும் கருவிகளாக மாறவேண்டும். திவ்விய நற்கருணையில் இயேசுவைத் தகுதியோடு உட்கொண்டு அவரது உறவில் வளரவேண்டும். ஒரே பந்தியில் அமர்ந்து இயேசுவின் திரு உடலையும், திரு இரத்தத்தையும் உட்கொள்ளும் நாம் அனைவரும் கிறிஸ்துவின் மறை உடலின் உறுப்பினராகி ஒரே குடும்பமாக வாழ வரம் வேண்டிப் பலியில் இணைவோமாக.

**முதல் வாசகம் : தொ.நூ 14:18-20**
அப்பமும் திராட்சை இரசமும் கொண்டு வந்தார்.

**பதிலுரைப் பாடல் :**
மெல்கிசெதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே.

**இரண்டாம் வாசகம் : 1கொரி 11:23-26**
நீங்கள் உண்டு பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அறிவிக்கின்றீர்கள்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா அல்லேலூயா விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார் என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 9:11-17**

### விசுவாசிகளின் மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

உள்ளத்திற்கும் உடலுக்கும் நலம் தரும் மருந்தாகத் திகழும் இயேசுவின் திருவுடல், திருஇரத்தப் பெருவிழாவைக் கொண்டாடும் திருஅவைக்கும் திருத்தந்தை ஆயர்கள், அருட்பணியாளர், துறவிகள், இறைமக்கள் அனைவருக்கும் என்றும் அருமருந்தாகவும் ஆன்ம சக்தியாகவும் உயிரோட்டமுள்ள கிறிஸ்தவ வாழ்வாகவும் விளங்கிட வரமருள வேண்டுமென்று...

## பொதுக்காலத்தின் 13வது ஞாயிறு (30.06.2019)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 13வது ஞாயிறு தினத்தில் ஒன்றுகூடி வந்துள்ள நமக்கு வழங்கப்பட்டுள்ள இறைவார்த்தைகள் இயேசு யார்? என்னவாக இருக்கின்றார் எனச் சிந்திக்கத் தூண்டுகின்றன. மூன்று ஆண்டுகள் பொது வாழ்வில் பணியாற்றிய இயேசுவைப் பற்றி மக்களும் திருத்தூதர்களும் பல்வேறு கருத்துக்களைக் கொண்டிருந்தனர். இதை அறிந்த இயேசு நீங்கள் என்னை யாரென்று சொல்லுகின்றீர்கள் எனத் தம் சீடர்களைப் பார்த்து கேட்கின்றார். அதற்கு பேதுரு தகுந்த பதிலை அளிக்கின்றார். இயேசுவைப் பின்பற்ற தன்னலம் துறக்கவேண்டும். நமது தேவைகளை இழக்கவேண்டும். பிறரின் தேவைகளுக்காகப் பாடுபடவேண்டும். இந்த ஆர்வம் எப்படி வரும்? கிறிஸ்தவர்களாகிய நாம் நமக்குள் வேரோடிப் போயிருக்கும் தன்னல நாட்டங்களைத் தூக்கி எறிய இன்றைய நற்செய்தியில் அழைப்பு விடுக்கிறார் இயேசு. இன்றைய சூழலில் நமது பார்வையில், விசுவாச வாழ்வில் இயேசுவை நாம் யார் என்று சொல்வோம். இயேசுவின் வாழ்க்கையை நம்மால் பிரதிபலிக்க முடியுமா? துன்பங்களையும், துயரங்களையும், சிலுவைகளையும் நாம் ஏற்று வாழத் தயாராக இருக்கின்றோமா? அப்படி இருந்தால் நாமும் பேதுருவைப் போல அறிக்கையிட முடியும். இதற்கான அருள்வேண்டி மன்றாடுவோம்.

**முதல் வாசகம் : 1 அரச 19:16,19-21**
எலிசா புறப்பட்டுப்போய் எலியாவுக்குப் பணிவிடை செய்தார்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவர் தாமே என் உரிமைச் சொத்து.

**இரண்டாம் வாசகம் : கலா 5:1, 13-18**
உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா அல்லேலூயா ஆண்டவரே பேசும் உம் அடியான் கேட்கிறேன். நிலை வாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 9:51-62**

### விசுவாசிகளின் மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இயேசுவின் போதனைகளையும் மதிப்பீடுகளையும் பின்பற்றி அவர் யார் என்பதை உணர்த்தும் வழிவகைகளைக் கைக்கொண்டு உலகிற்கு அவரை வெளிப்படுத்த அவரின் சாட்சிகளாக வாழும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர், துறவிகள் அனைவருக்கும் வேண்டிய உடல், உள ஆன்ம பலத்தைப் பொழிந்தருள வேண்டுமென்று...

இன்றைய உலகிலும் எமது நாட்டிலும் நடக்கின்ற மனிதநேயத்திற்கும் மனித மாண்பிற்கும் விரோதமான செயல்களில் ஈடுபடும் அனைவரும் மனம்மாறி அனைவரையும் சமமாகவும் மனிதர்களாகவும் ஏற்று அன்பிலும் அமைதியிலும் ஒருமைப்பாட்டிலும் சிறந்து விளங்கவேண்டிய வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவோடு இணைந்துள்ள நாம் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து எமது வாழ்வின் துன்பங்களையும், சிலுவைகளையும் பொறுமையோடு ஏற்று வாழவும், பிற மத சகோதர சகோதரிகளுக்கு கிறிஸ்துவை அறிமுகம் செய்யவும் இயேசுவிடம் அவர்களை அழைத்துச் செல்லவும் வேண்டிய வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

## இறைப்பணியில் நான் அறிந்த அருட்தந்தை மனோகுமாரன் நாகரட்ணம் அடிகளார் அவர்களுக்கு பிரியாவிடை புகழ்மாலை



குருத்துவ வாழ்வில் 28 வருடங்களை பூர்த்தி செய்து எமது வெள்ளவத்தை புனித லோரன்ஸ் பங்கு ஆலயத்தில் ஐந்து ஆண்டுகள் பங்கு தந்தையாக பணியாற்றிய "பாதர் மனோ" என அன்புடன் அழைக்கப்படும் அருட்தந்தை மனோகுமாரன் நாகரட்ணம் அடிகளார் 2019 ஆனி மாதம் 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு புதுச்செட்டித்தெரு, வியாகுல மாதா ஆலயத்திற்கு பங்கு தந்தையாக மாற்றலாகி எம்மிடம் இருந்து பிரியாவிடை பெறுகிறார். அருட்தந்தை அவர்களே, நீங்கள் எங்கள் பங்கில் சேவையாற்றிய காலங்களை எம்மால் மறக்க முடியாது உங்களின் இடமாற்றம் எங்கள் பங்கிற்கு பெறும் பேரிழப்பாகும். நீங்கள் விட்டுச்செல்லும் இவ்வெற்றிடத்தை நிரப்புவது மிகவும் கடினம். உங்களின் கனிவான சிரிப்பு, பணிவு, நேர்மை, வெளிப்படைத்தன்மை போன்ற விசேஷ குணங்களால் பங்கு மக்களின் மனதில் ஆழமான தனி முத்திரையை பதித்துவிட்டீர்கள். பங்கு மக்கள் இறைபக்தியில் வாஞ்சையுடன் ஈர்க்கப்படவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் பல ஆன்மீக நிகழ்வுகளையும், நற்செய்தி தியானங்களையும் வழிநடத்துவதற்கு பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கியமைக்கு மனமார்ந்த நன்றி.

அருட்தந்தை மனோகுமாரன் அவர்கள் மாதா பக்தராக இருப்பதில் வியப்பொன்றுமில்லை. இருப்பினும், அவர் அன்னை மரியாளின் மேல் மிகவும் பற்றுள்ள ஒரு குருவானவர் என்பதை பங்கு மக்கள் கண்கூடாக கண்டுகொண்டார்கள். எமது பங்கின் விஷேட மும்மொழி திருப்பலி திருவிழா நிகழ்வுகளில் அவர் ஆற்றிய கருத்தாளமிக்க மறையுரை சொற்பொழிவுகள் பங்கு மக்களின் மனதை விட்டு என்றும் அகலாது. எத்தனையோ பங்கு தந்தையர்களால் நிறைவேற்றி வைக்க இயலாதுபோன புனித லோரன்சியாரின் வாராந்த நவநாட்களை ஆரம்பித்து பங்கு மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றியமை நீங்கள் எங்கள் பங்கிற்கு அழித்த பெரும் பொக்கிஷமாகும். அருட்தந்தையே, நீங்கள் மாற்றலாகி செல்லவிருக்கும்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..



# “மக்கள் மனம் போற்றும் கோடி அற்புதர்”

# தூய அந்தோனியார்



இறந்தும் இறவாமல் வாழ்கின்ற பதுவை நகர் தூய அந்தோனியார் கோடிக்கணக்கான மக்களின் மனம் போற்றும் காவலராக திகழ்கின்றார். சிறிது காலம் இவ்வு-லகில் வாழ்ந்த இப்புனிதர், இறந்த அடுத்த ஆண்டே புனிதராக பிரகடனப்படுத்தப்பட்டார். காரணம் வாழ்ந்த போதும் இறைவனுக்கு உகந்த வாழ்வு வாழ்ந்த புனிதர் தன் பேச்சாற்றலாலும், இறைவன் மீது கொண்ட விசுவாச-த்தினாலும் பல மக்களை இறைவனிடம் கொண்டு சேர்த்தார். இத்தகைய வல்லமைமிக்க புனிதர், இன்றளவும் மக்களின் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார். இப்புனிதரின் மாபெரும் ஆலயமும், அவருடைய அழியாத திருநாவும் கொச்சிக்கடை பிரதேசத்தில் அவருக்கென கட்டப்பட்ட ஆலயத்தில் பிர-மாண்டமாக வைக்கப்பட்டுள்ளது. கொச்சிக்கடை வாழ் மக்கள் “எங்களின் பாதுகாவலர்” என்று பெருமையாக அழைப்பதற்கு காரணம் கொச்சிக்கடை வாழ் மக்களின் “God Father” ஆக திகழ்கின்றார். இம்மக்கள் அந்தோ-னியார் மேல் கொண்டுள்ள அன்பும், மரியாதையும் இன்றளவும் பெருகுவதை காணலாம். இப்பிரதேசத்தில் பிறந்து வளர்ந்த நான் இத்தகைய விடயங்களையும் என் கண்களால் கண்டுள்ளேன்.

பாஸ்கா ஞாயிறு கொடூர நிகழ்வின் பின்னர் வைகாசி மாதத்தின் முதல் செவ்வாயன்று ஆலயத்தின் இடது பக்கம் மக்களின் வணக்கத்திற்காக திறந்து வைக்கப்பட்டது. மக்கள் திரள் திரளாக அழுது புலம்பிய வண்ணம் அந்தோனியாரின் ஆலயம் நோக்கி வந்ததை நான் என் கண்களால் கண்டேன்.

**“எங்கட கோயிலுக்கு இப்படி செஞ்சிட்டாங்களே”,**

**“எப்படி இருந்த கோயில் இது”,**

**“அந்தோனியார் நல்ல வழிகாட்டுவார்”,**

**“கோயில பார்க்கும்போதே நெஞ்சு பொறுக்குதில்ல”,**

**“கண்ல கண்ணீர் வருது கோயில பார்க்கும்போது”**

இவை எல்லாம் என்னோடு பகிர்ந்துகொண்ட மக்களின் மன அலைகள். இதனை வைத்து பார்த்த போது தான் நான் என்னுள் எண்ணிக் கொண்டேன், மக்களின் விசுவாசம் என்பது இறைவனை நோக்கிச் செல்ல, எவ்வாறு புனிதர்கள் தங்கள் பரிந்துரை வழியாக மக்களுக்கு உதவி புரிகிறார்கள் என்று.

இத்தனைக்கும் காரணம் கோடி அற்புதரின் புதுமைகளும், அவருடைய பரிந்துரையும் மட்டுமே அன்றி வேறெதுவுமில்லை. கொச்சிக்கடை வாழ் மக்கள் மட்டுமல்ல இலங்கையின் பல்வேறு இடங்களிலுமிருந்தும் மக்கள் திரள் திரளாக இந்த ஆலயத்தில் வந்து வழிபாடு செய்வது வழமையாக இருக்கின்றது. இந்த நிலை மீண்டும் வருமா? மக்கள் ஆலயத்திற்கு வருவார்களா? இனி ஆலயம் எப்படி இருக்கும்? அந்தோனியார் ஏன் இதை அனுமதித்தார்? என்ற கேள்விகளும் என்னை நோக்கி எழுந்தன. இத்தனைக்கும் பதில் கூறவேண்டுமாயின் எமது விசுவாச வாழ்வு மட்டுமே காரணமாக அமையும்.

தூய அந்தோனியார் புதுமைகளை புரியும் புனிதர் என்பதை மக்கள் அறிந்ததனால் தான் அவரை நோக்கி படையெடுத்தனர். நான் கண்ட உண்மை இத்தனை பெரிய நிகழ்வு (தற்கொலை குண்டு தாக்குதல்) இடம் பெற்றிருந்தும், ஆலயத்தின் பல பகுதிகளுக்கு சேதமேற்பட்டிருந்தும், புதுமைமிக்க அந்தோனியாரின் திருச்சுரூபம், ஆசீர்வழங்கும் திருச்சுரூபம், அவருடைய திருப்பண்டம் இவை ஒன்றுக்கேனும் எதுவித சேதமும் ஏற்படவில்லை. அது அவ்வாறே இருந்த இடத்தில் இருந்து காட்சி கொடுத்தது என்றாலும் மக்களின் ஏக்கம் புதுமைகளைப் புரியும் அந்தோனியார் ஏன் இதனை அனுமதித்தார்?

மனித மட்டங்களில் இதற்கு விடை கூற முடியாவிட்டாலும், பல இழப்புக்களை சந்தித்து விட்டோம், பல உயிர்களை காவுகொண்டது இந்த தாக்குதல். மக்கள் குடும்ப உறவுகளை இழந்து தவிக்கின்றார்கள். இவர்களுக்கான ஆறுதல் என்ன? இவர்களுக்கான எதிர்கால வாழ்வு என்ன? என்பன சிந்திக்கின்றபோது என்னுள் எழும் சிந்தனை இறைவன் பல வேதசாட்சிகளை எம்மிடையே உருவாக்கியுள்ளார். இவர்களுடைய மரணம் எமக்குத் தரும் பாடம் தான் எந்த நிலையிலும் இறைவனின் அன்புக்கு பிரதியன்பு காண்பிக்கும் மனிதனின் நிலையில். மனிதனின் வாழ்வு என்பது இறைவனின் தோட்டத்தில் மலரும் மலர்களே. இறைவன் தனக்கு தேவையான மலர்களை எடுத்துக்கொண்டு விட்டார். நாங்கள் நடப்பட்ட விதைகள் பலன் கொடுக்க இன்று பூந்தோட்டத்தில் நடப்பட்டுள்ளோம். நடப்பட்ட நாங்கள் இறைவன் அருளியுள்ள இக்காலத்தில் பெருமையுடன் எம்முள் வாழும் தூய அந்தோனியாரின் பரிந்துரையால் இன்னும் அற்புதங்களை பெருகச் செய்ய வேண்டும் என்பதே.


இறந்த உறவுகள் யாவும் கோடி அற்புதரின் புதுமைகளை வாழ்வில் உணர்ந்த மக்கள். அதனால்தான் அவரை நோக்கி வந்து இறைவனுக்கு புகழ்பாடினார்கள். எம் சிந்தனை எல்லாம் வானுயர்ந்து இறைவனை நோக்கி எழலாம் என்றாலும், மனித நிலை கத்தோலிக்கர்களாகிய எமக்கு இது ஒரு சாட்சியம். இந்த சாட்சியத்தின் வழியாக கோடி அற்புதர் எம்மையும் திடப்படுத்துகின்றார். இறந்த எம் உறவுகள் யாவரும் இறைவன் பாதத்தில், அந்தோனியாரின் பரிந்துரையால் இருப்பார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எமது விசுவாச வாழ்வை திடப்படுத்துவோம். உறவுகளை இழந்தோம், ஆலயத்தின் புனிதத்தன்மையை இழந்தோம், இரத்தக்கறைபடிந்த ஆலயம், இயேசுவின் உயிர்ப்போடு மீண்டும் நாம் உயிர்த்தெழ எம்மை அழைக்கின்றது. கோடி அற்புதரை நோக்கி செல்வோம், புதுமையின் நாயகன் எமக்காக பரிந்துபேசுவார், இழந்த எம் கிறிஸ்தவ விசுவாசத்தை உறுதிப்படுத்துவார். வானுயர எம்மையும் இறைவன் பால் உயர்த்துவார்.

**கோடி அற்புதரே எங்களுக்காக வேண்டுகொள்ளும்.**

சகோ. பெ. டிலோயிட்சன் பெர்னான்டோ,
தேசிய குருமடம், கண்டி.

**“இழந்துவிட்டேன் என வருந்தாதே அது சில நாட்கள் தான் பெரிதான கிருபைகள் உன்னை வந்து சேரும்”**

**இயற்கையின் ஊடாக இறைவன் வெளிப்படுத்திய செய்தி**



## குருத்துவ அபிஷேக நிகழ்வில் கர்தினால் ஆண்டகை...

# "இறைமக்களின் பணிக்காக அழைக்கப்பட்டோரே குருக்கள்"



கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் 10 தியாக்கோன்கள் இம்மாதம் 1ம் திகதி கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் புனித லூசியா பேராலயத்தில் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர். அன்றைய திருப்பலியை ஒப்புக்கொடுத்த கர்தினால் ஆண்டகை தனது மறையுரையில், குறிப்பாக கடந்த பாஸ்கா ஞாயிறன்று உயிர்த்தியாகம் செய்த மக்களை கருணையுடன் நினைவுகூறும்படியாக கேட்டுக்கொண்டார். எங்களுடைய நாட்டு நிலவரம் இன்றளவும் குழப்பிப்போயுள்ள நிலையில் இத்தகைய குருத்துவ அபிஷேக விழாவை மிகவும் எளிமையான முறையில் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். இறந்துபோன ஆன்மாக்களை நினைவுகூறுகின்ற அதேவேளை எம் ஆண்டவராம் கிறிஸ்து மேல் கொண்ட அதீத அன்பினால் மக்கள் ஆலயத்திற்கு வருகை தந்து உயிரை தியாகம் செய்தமை அவர்களின் வேதசாட்சிய மரணத்தை காட்டுகின்றது. அதேபோல் இக்குண்டு வெடிப்பினால் காயமுற்ற மக்கள் கூடிய விரைவில் குணமடைய வேண்டி இந்த திருப்பலியில் செபிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

பொருத்தமானது. குருக்கள் நம்பிக்கை வழியாக தூய வாழ்வு வாழும்படியாக அழைக்கப்படுகின்றார்கள். கிறிஸ்துவின் குருத்துவத்தின் வழியாக, அவருடைய சிலுவை பலியை ஒப்புக்கொடுக்கும் குருக்கள் அவருடைய இறைமக்களை பரிசுத்த வாழ்வுக்கு இட்டுச் செல்லவேண்டும். இறைமக்களுக்கு விசுவாசத்தை வளர்க்கவேண்டும். தாங்கள் போதிப்பதை வாழ்வாக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் நாளாந்தம் ஒப்புக்கொடுக்கும் திருப்பலி, தியாகம் நிறைந்த பலியாக மாறும். இதற்கென உங்களை நீங்கள் தியாகம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து கூறிய கர்தினால் ஆண்டகை உங்களுடைய கரங்களில் திருக்கிண்ணத்தை ஒப்புக்கொடுக்கும்போது கூறும் வார்த்தைகளை நினைவிற் கொள்ளுங்கள்.

✠ பரிசுத்த இறைமக்களின் காணிக்கைகளை ஏற்றுக்கொள்ளுங்கள்.

✠ நீங்கள் செய்வதை அறிந்து கொள்ளுங்கள்

✠ நீங்கள் ஒப்புக்கொடுப்பதை வாழ்வாக்குங்கள்

"நான் செய்தது போல நீங்கள் ஒருவர் மற்றவர்களுக்கு செய்யுங்கள்" உங்கள் பங்கு பணிகளை மேற்கொள்ளுகின்ற போது இதனை நினைவில் கொண்டு வாழவேண்டும். இதனால் தான் பேதுருவிடம் "நீ என்னை அன்பு செய்கின்றாயா?" என்று மும்முறை கேட்டு திருச்சபையை ஒப்புக்கொடுத்தார். இத்தகைய பணியினை தொடர்ந்து செய்ய தேர்ந்துகொள்ளப்பட்ட நீங்கள், கிறிஸ்துவின் முன்மாதிரிகையான வாழ்வை கொண்டு, செபத்தாலும், தியாகத்தாலும் வாழ்வை அர்ப்பணமாக்குங்கள் என்று தியக்கோன்மாரைக் கேட்டுக் கொண்டார்.

அன்றைய திருவிழாத் திருப்பலியில் கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர்களான மேதகு J.D. அந்தனி ஆண்டகையும், மேதகு. மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகையும், தேசிய குருமட அதிபரும், கொழும்பு உயர்மறைமாவட்ட குருக்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் பலரும் கலந்து கொண்டனர்.





தொடர்ந்து தனது மறையுரையில் இந்தகாலம் மேய்ப்புப்பணிக்கு ஒரு சவாலான காலமாக இருக்கிறது என்றாலும் எங்களுடைய வாழ்வு தூபம்போல இறைவனின் சந்நிதானம் செல்லவேண்டும். புனித பவுல் கூறுவதுபோல கடவுளுக்கு உகந்த தூய உயிருள்ள பலியாக உங்களை படையுங்கள் என்று கேட்டுக்கொண்டார். இது குருக்களுக்கு

✠ கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு பாஸ்கா மறைபொருள் வழியாக உங்கள் வாழ்வை நாளாந்தம் புனிதப்படுத்துங்கள்.

இத்தகைய உயரிய வாழ்வுக்கு அழைக்கப்பட்ட நீங்கள் கடைசி இராப்போசனத்தின் மூலம் கிறிஸ்து கொடுத்த வாக்குறுதிகளை நினைவிற் கொள்ளுங்கள்.



## இந்தியப் பிரதமர் மோடி அவர்களின் புனித அந்தோனியார் திருத்தலத்திற்கான விஜயம்







# என் முழுமையான செல்வம்

பேரசனுக்கு மலை உச்சியிலே அழகிய வசந்தமாளிகை கட்டி அங்கு வாழ்ந்து உயிர்விடவேண்டுமென்ற ஆசை. வசந்த மாளிகை தயாரானவுடன் தான் சேர்த்துவைத்திருந்த செல்வங்களை எல்லாம் பெட்டியிலே போட்டு பூட்டி ஒட்டகத்தின் மீது ஏற்றிச்செல்கிறான். படை வீரர்கள் அரசனை பின்தொடர்கின்றனர்.

நவரத்தினங்கள் அடங்கிய பெட்டியை சுமந்துசென்ற ஒட்டகம் கால் தடுக்கி விழுந்தது. பெட்டி கீழே விழுந்து உடைந்து நவரத்தினங்கள் எல்லாம் சிதறி உருண்டோடுகின்றன. அரசன் படைவீரர்களிடம், ‘பொழுதுசாயும்நேரமாகிவிட்டது. எனவே சிதறி கிடக்கும் நவரத்தினங்களை நீங்களே பொறுக்கி எடுத்துக்கொள்ளுங்கள்’ எனச்சொல்லி அரசன் தொடர்ந்து மலை உச்சி நோக்கி நடக்கிறான். படைவீரர்கள் முண்டியடித்துக்கொண்டு பொறுக்குகிறார்கள். சிறிது தூரம் சென்ற அரசன் திரும்பி பார்க்கிறான். ஒரே ஒரு பணியாளன் மட்டும் தன்னை பின்தொடர்வதை ஆச்சரியத்துடன் பார்த்து, ‘என்ன! உனக்கு செல்வம் வேண்டாமா?’ எனக் கேட்க, பணியாளன் சொல்கிறான் ‘நான் இப்போது என் அரசரை பின்தொடர்கிறேன்.



**நீரே என் முழுமையான செல்வம்**

**உலக நிலையை உணர்ந்து நமது சிறுமையை உணர்ந்தால் இறைவன் நமது பெருமைகளை வெளிப்படுத்துவார்**






மரியம் அண்ணன் தரம் - 5 இராஜகிரிய



R. அனுஸ்கு தரம் - 6 இராஜகிரிய

## ஆறு வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



## விவிலியம் அறிவோம்

### விவிலியம் வாசிக்க...

### விவிலியப் பகுதி




### மாற்கு நற்செய்தி 03ம் அதிகாரம்

36. மக்கள்தம்மை நெருக்கி விடாதபடிக்கு எதை ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார்?
37. தீய ஆவிகள் இயேசுவை கண்டபோது எவ்வாறு கத்தின?
38. இயேசு தாம் விரும்பியவர்களை எங்கு வரவழைத்தார்?
39. இயேசு பன்னிருவரை எதற்காக நியமித்தார்?
40. இயேசு பன்னிருவக்கு வைத்த பெயர் என்ன?
41. செபதேயுவின் மகன் யாக்கோபு யாக்கோபின் சகோதரரான யோவான், இவ்விருவருக்கும் இயேசு இட்ட பெயர் என்ன?
42. பொவனேர்கேசு என்றால் பொருள் என்ன?
43. இயேசுவை காட்டி கொடுத்த சீடனின் பெயர்?
44. மக்கள் இயேசுவை குறித்து எப்படி பேசினார்கள்?
45. மறைநூல் அறிஞர் இயேசுவுக்கு என்ன பிடித்திருக்கிறது என்றார்?

15ம் பக்கம்

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.

மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com




ஜூன் 2ம் திகதி ஞான ஒளி பத்திரிகையில் வெளிவந்த 10 கட்டளைகளை சரியாக எழுதி அனுப்பிய வர்களுக்கு

**எமது பாராட்டுகள்**

1. ஆரோன் நோர்மன் தரம் 6. ஆசீர்வாதப்பர் கல்லூரி

2. ஐ. ஏட்றியன் ஐவன் தரம் 4 புனித பேதுரு கல்லூரி

3. ஆன் பிளசினா போல்தாஸ் தரம் 6 நல்லாயன் மடம்

4. அலக்ஸ் ஜூலியன் தரம் 9. புனித ஆசீர்வதப்பர் கல்லூரி

### தரப்பட்டுள்ள படங்களைப் பாருங்கள்

அவை ஒவ்வொன்றும் எந்த அருள் அடையாளங்களைச் சுட்டிக் காட்டுகின்றன? என கண்டு பிடித்து அதனை எழுதி அனுப்புங்கள்.

பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களை எழுதும் முதல் 5 பேர்களின் விபரங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

ஜூன் 24ம் திகதிக்கு முன் மேலே கொடுக்கப்பட்டுள்ள விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.




# உன்னோடு ஒரு நிமிடம்



## தேர்ந்தெடுக்கும் ஆற்றல் படைத்தவன் நீ

எந்தவொரு படைப்புக்கும் கொடுக்கப்படாத ஆற்றல் ஒன்றை நான் உனக்குச் சொந்தமாக்கினேன். அதை என் கொடை-யாக உனக்குப் பொழிந்திருக்கின்றேன். சிந்திக்கவும், முடிவெடுக்கவும், அன்பு செய்யவும், கற்பனை செய்யவும், உருவாக்கவும், திட்டமிடவும், எடுத்துரைக்கவும் பல ஆற்றல்களை நான் உனக்குத் தந்திருக்கிறேன்.

நான் இன்னும் ஓர் அரிய ஆற்றலை உனக்குத் தந்திருக்கிறேன். அதுதான் தேர்ந்தெடுக்கும் ஆற்றல் இந்த ஆற்றல்தான் நல்லது கெட்டதைத் தேர்ந்தெடுக்கும் ஆற்றல்.

இந்த ஆற்றல் எனது வானத்தூதர்களுக்குக் கூட கொடுக்கப்படாத ஆற்றல் இந்த ஆற்றலால் நான் உன்னை எனது வானத்தூதர்களுக்கும் மேலாக வைத்துள்ளேன்.

எனது வானவர்களுக்குக் தேர்ந்தெடுக்கும் ஆற்றல் கிடையாது. எனது வானவர்கள் பாவம் செய்ய விரும்ப முடியாது. நீ எதையும் தேர்ந்தெடுக்கலாம். நல்லது - கெட்டது பாவம் - புண்ணியம் அன்பு செய்வது - அன்பு செய்யாமலிருப்பது, விண்ணகத்துக்குச் செல்வது அல்லது செல்லாமல் இருப்பது, போன்றவற்றைத் தேர்ந்தெடுக்கும் ஆற்றல் படைத்தவன் நீ.

உமது மனச் சுதந்திர-த்திற்கேற்றவாறு உன்னுடைய சுயதன்-மையைத் தீர்மானிக்கும்படி நான் உனக்கு ஆற்றல் கொடுத்துள்ளேன்.

உன் வாழ்க்கை நெறியை நீ விரும்பும் எந்த முறையிலும் உருவாக்க உனக்கு உரிமை உண்டு.

மிகக் கேவலமான முறையில் வாழ்க்கையைச் சிதறடிக்கவோ அல்லது தெய்வீகமான முறையில் மறுபடியும் புதிதாகப் பிறந்து வாழவோ உனக்கு உரிமை உண்டு.

உன்னையும் பிறரையும் அன்பு செய்து புனிதத்தில் வாழவோ அன்பு செய்யாது பாவத்தில் விழவோ எதற்கும் உனக்குச் சுதந்திரம் உண்டு.

நான் உனக்களித்த தேர்ந்தெடுக்கும் ஆற்றலை உன்னிட-மிருந்து நான் திரும்ப வாங்கிக் கொள்ளவே இல்லை. உனது தேர்ந்தெடுக்கும் ஆற்றலை நல்ல முறையில் பயன்படுத்து.

பிறரை வெறுப்பதை விட அவர்களை அன்பு செய்ய பயன்படுத்து. மற்றவர்களைப் பற்றி தீய விமர்சனம் செய்வதைவிட அவர்களைப் பாராட்டப் பயன்படுத்து. அவர்களுடைய குறைகை-ளைக் காண்பதை விட அவர்களது நிறைகளைக் காணப் பயன்படுத்து.

ஆனால் நீயோ மற்றவர்களைப் பழித்து-ரைப்பதை விட அவர்கள் வளரும் வழிகளைக் காணப் பயன்படுத்து. மற்றவரிடமிருந்து திருடுவதைவிட மற்றவர்களுக்குக் கொடுக்கப் பயன்படுத்து, மற்றவர்களைக் காயப்படுத்துவதைவிட அவர்களைக் குணப்படுத்தப் பயன்படுத்து

அழுவதை விட்டு விட்டு மகிழ்ச்சியாய் இருக்கப் பயன்படுத்து எதையும் அழிப்பதைவிட அதை உருவாக்கப் பயன்படுத்து, பாவம் செய்வதைவிட புண்ணியம் செய்வதற்குப் பயன்படுத்து சாவைத் தேடுவதைவிட வாழ்வை வளப்படுத்தப் பயன்படுத்து.

# புனித அந்தோனியார் திருத்தலத்தில் தெய்வாதீனமாக உயிர் தப்பிய ஒரு மகனின் அனுபவம்...

**கடவுளிடம் அன்பு கூர்பவர்களோடு, அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு, அவர்கள் நன்மைக்காகவே ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கிறார் என்பது நமக்குத் தெரியும் (உரோ8:28)**

இளம் ஆசிரியர் தனக்கு ஏற்பட்ட துன்பம், வேதனை, பயம், கலக்கம் போன்ற சந்தர்ப்பங்களில் இறைவனிடமிருந்து அழைத்தல் வந்த விதமும் அதற்கு பதிலளித்த விதமும் ஆச்சரியத்திற்குரியதாகும். எமது வாழ்வில் எமக்கு ஏற்படும் நல்ல, தீய நிகழ்ச்சிகளை தூய ஒளியில் பார்த்து பதிலளிக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுக்கிறது இந்த இளம் மகனின் தெளிந்த அறிவு.

இறைவனின் அழைப்பு வந்த விதமும்...! அழைப்பை இனம் கண்டு பதிலளித்த விதமும்...!!

நான் உயிர்த்த ஞாயிறு திருப்பலியில் பங்கு கொண்டேன். அன்றைய தினம் நடந்த அனர்த்தத்திற்கு உள்ளாகி தட்டுத் தடுமாறி எனது அம்மாவின் உதவியுடன் காயத்திற்கு மருந்து போட்டு வீடு வந்து சேர்ந்தேன்.

இரவு தூங்குவதற்கு முதல் செபித்தேன்.

**என்ன அந்தோனியாரே! நான் உங்களை நம்பி தானே உங்கள் ஆலயத்திற்கு வந்தேன்..., ஆலயத்திலேயே இப்படி நடந்து விட்டதே...!**

என புலம்பிக் கொண்டுகுழப்பத்தில் இருந்தேன். மதம் என்ற ஒன்று இருக்கிறதா..? என்ற கேள்விகள் பல எனக்குள்ளிலிருந்து எழுந்துக்கொண்டு இருந்தது. இவ்வாறான குழம்பிய மனநிலையிலேயே தூங்கினேன். தூக்கத்திலே எனக்குள்ளே ஓடிய காட்சி:

பரிசுத்த வேதாகமத்தை எடுத்து வாசிக்கிறேன். அதில் ஓர் வசனம்

**சொதோம் கொமோராவை அழித்ததைப்போல் யெருசலேம் தேவாலயம் அழிக்கப்படும். மீண்டும் அதை கட்டுவிப்பேன்**

இந்த வசனத்தின் மூலம் இறைவன் என்னிடம் எதை எதிர்பார்க்கிறார் என எனக்கு புரியவில்லை. இறைவன் என்னை ஏதோ தனது திட்டத்திற்காக தேர்ந்-தெடுத்துள்ளார்; நான் பாவி, என்னால் எதை சாதிக்க முடியும், அவரின் திட்டம் என்ன என்று புரியவில்லை. ஒவ்வொரு திருப்பலியிலும் என்ன இருக்கிறது. ஒரே மாதிரியான வாசகங்கள், நற்செய்தி, மறையுரை, நற்கருணை வழிபாடு என ஒரேவிதமாக தானே நடந்துக்கொண்டிருக்கிறது; என அலட்சியப்படுத்திய என்னை இறைவன் தேர்ந்தெடுப்பாரா? என்ற எண்ணம் ஓடிக் கொண்டிருந்தது.

உயிர்த்த ஞாயிறு திருப்பலி என் கண்முன்னே வந்தது. திருப்பலியில் நான் இருக்கும்போது என்னருகில் இருந்தவர்களின் சந்தோசமான முகங்கள், புத்தாடை அணிந்த சிறுவர்கள் மகிழ்ச்சியால் அங்கும் இங்கும் உலாவிக்கொண்டிருந்த காட்சியும் வந்தது. திருப்பலியில் மன்றாட்டு முடிந்து மெழுகுத்திரிகளை அணைத்தோம். அந்நேரத்தில் கொடூர சத்தத்துடன் வெடிக்கும்போதே அவரின் தலை துண்டாகி வீசுபட்டு செல்கிறது. சிறிது நேரத்தில் அவை அனைத்தும் இல்லாமல் போய் **வெறுமையான** காட்சி ஏற்பட்டது. பின்பு குண்டு வெடித்த சத்தம் எனக்குள் ஒலித்து காதைப் பிளந்தது போல் இருந்தது. அந்த சத்தத்தையும் அதனோடு வந்த கெட்ட மணத்தையும் வார்த்தைகளில் விவரிக்க முடியாது. மீண்டும் ஒரு மின்னல் கோடு வந்து வெறுமையானது. அனைத்துமே கருமை சூழ்ந்துகொண்டது. எனது உடல் வியர்த்து விறுவிறுத்துக்கொண்டு வந்தது. இது எனக்கு மீண்டும் மீண்டும் ஏன் நினைவுக்கு வருகிறது என நினைக்கும்போதே சிறிய விளக்கொளி போன்ற மெல்லிய சிறுவெளிச்சம் வந்து அதிலிருந்து ஒரு குரலொலி கேட்டது.

**நான் உன்னை ஒரு ஊடகமாக பயன்படுத்தப் போகிறேன். எந்த வாதையினால் யார் பாதிக்கப் பட்டாலும் அவர்களில் உன் கையை வைத்து செபி. அவர்கள் குணமடைவார்கள். உன்னை நான் தெரிந்துகொண்டேன்**

உடனே விழித்து படுக்கையை விட்டு எழும்பி நேரத்-தைப்பார்த்தேன் விடியற் காலை 3.45. அதிகமான வேதனையில் இருந்தேன். எழுந்து பிதா, சுதன்.... போட்டு விட்டு பார்த்தேன் வீட்டில் அனைவரும் நன்றாக தூங்கிக் கொண்டு இருந்தார்கள்.

'ஏன் இந்த கனவு; என்னோடு கதைத்தது யார்? இது எனது பிரம்மையா...? என என்னிடமே கேட்டு விட்டு, 'இயேசுவே! நீங்கள் என்னோடு கதைத்ததாகவே படுகிறது. நான் உங்களில் சந்தேகம் கொள்ளவில்லை. என்னை நான் சோதித்து பார்க்கிறேன் எனக் கூறி எனது உடம்பில் இடுப்பின் இரண்டு பக்கமும் கறுப்பு நிறத்தில் பெரிய இரத்த உறைவு இருந்தது. இரண்டு பக்கமும் எனது கைகளை வைத்து **இயேசுவின் இரத்தம் ஜெயம்...., இயேசுவின்.....** என செபித்துக்கொண்டே தூங்கி விட்டேன்.

**திருப்பலியில் மன்றாட்டு முடிந்து மெழுகுத்திரிகளை அணைத்தோம். அந்நேரத்தில் கொடூர சத்தத்துடன் வெடிக்கும்போதே அவரின் தலை துண்டாகி வீசுபட்டு செல்கிறது. சிறிது நேரத்தில் அவை அனைத்தும் இல்லாமல் போய் வெறுமையான காட்சி ஏற்பட்டது.**

எப்படி தூக்கம் போனது என்றே விளங்கவில்லை. தூங்கும்போது நேராகதான் தூங்க முடியும் இரத்த உறைவு இருந்ததால் திரும்பி படுக்க இயலாது. காலை 6.00 மணிக்கு அம்மா தேநீர் கொண்டு வந்து வைத்தார்கள். நான் திரும்பி தேநீர் கோப்பையை எடுக்கும்போது வேதனை இருக்கவில்லை. உடனே கோப்பையை வைத்து விட்டு கண்ணாடியில் பார்த்தேன். வீக்கம் மறைந்து வலி நீங்கியிருந்தது. ஒவ்வொரு நாளும் 45 நிடங்கள் ஐஸ் கட்டியினால் ஒத்தடம் கொடுத்த பின்பே தூங்குவேன். அப்போது குறையாத வலி ஒரே நாள் செபத்தில் குணமானதே என எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இது ஒரு புதுமையாக எனக்குள் ஊடுருவியது.

எனது இந்த அனுபவத்தை நான் படித்துக் கொடுக்கும் அனைத்து மாணவர்களுக்கும் சாட்சியாக கூறிய பின்பே அன்றைய பாடத்தை ஆரம்பிப்பேன்.




## உயிருக்குப் போராடும் இளை"ர் அருள்பணியாளராகஃஃஃ

இறுதி நிலை புற்றுநோய் காரணமாக, போலந்து நாட்டில், தன் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கும் ஓர் இளைய துறவி, மே 24, கடந்த வெள்ளியன்று, வார்சா மருத்துவமனையில் அருள்பணியாளராக அருள்பொழிவு செய்யப்பட்டார்.

Orionine அருள்பணியாளர்கள் என்றழைக்கப்படும் துறவு சபையின் உறுப்பினரான மிக்கேல் லோஸ் (Michal Los) என்ற இளந்துறவிக்கு, தியாக்கோன் மற்றும் அருள்பணியாளர் என்ற இரு நிலைகளையும், ஒரே வேளையில் வழங்குவதற்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சிறப்பான அனுமதி வழங்கியதையடுத்து, லோஸ் அவர்களுக்கு திருப்பொழிவு நிகழ்ந்தது.

மே 23, வியாழனன்று Orionine அருள்பணியாளர்கள் சபையில், தன் இறுதி வார்த்தைப்பாட்டினை, மருத்துவ மனை படுக்கையில் இருந்தவண்ணம் எடுத்த இளையவர் லோஸ் அவர்களை, அடுத்த நாள், வெள்ளியன்று, Warsaw-Praga மறைமாவட்டத்தின் ஆயர் Marek Solarczyk அவர்கள் தியாக்கோனாகவும், அருள்பணியாளராகவும் திருப்பொழிவு செய்தார்.


மே 25, சனிக்கிழமையன்று, அருள்பணி மிக்கேல் லோஸ் அவர்கள், தன் குடும்பத்தினருக்கும், நெருங்கிய உறவினருக்கும், மருத்துவமனை படுக்கையில் இருந்தவண்ணம் தன் முதல் திருப்பலியை நிறைவேற்றினார் என்று, CNA கத்தோலிக்கச் செய்தி கூறியுள்ளது.

இளம் அருள்பணியாளர் லோஸ் அவர்கள் மருத்துவமனை படுக்கையில் ஆற்றிய முதல் திருப்பலியின்போது,



தனக்காகச் செபிக்கும் அனைவருக்கும் இறுதியில் நன்றி கூறி, ஒரு புதிய அருள்பணியாளராக, அவர்கள் அனைவரையும் ஆசீர்வதித்தார்.

## வெட்கப்படும் அளவுக்கு பெண்களை நடத்தும் முறைக்கு எதிராக..




இங்கிலாந்து மற்றும் வேல்ஸ், அயர்லாந்து கத்தோலிக்கத் திரு அவைகள், ஜூன் 16, ஞாயிறன்று, வாழ்வதற்கு உரிமை என்ற நாளைச் சிறப்பிக்கின்றன.

இந்நிகழ்வுக்கு ஆதரவாக, திருத்தந்தை செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

**குடும்பங்களில் இடம்பெறும் உரிமை மீறல்களுக்கு எதிராய்** என்ற தலைப்பில் நிகழவிருக்கும் இந்த நாளுக்கு திருத்தந்தை அனுப்பியுள்ள செய்தியில், அனைத்து விதமான உரிமை மீறல்களுக்கு எதிராய் நடவடிக்கைகள் எடுக்கப்படுமாறு வலியுறுத்தியுள்ளார்.

சிலவேளைகளில் பொருள்கள் போன்றும், வெட்கப்படும் அளவுக்கும் பெண்கள், நடத்தப்படும்முறை பற்றியும் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, சமுதாயத்தில், மிகவும் நலிந்த நம் சகோதரர், சகோதரிகளுக்கு ஆதரவாக ஆயர்கள் எடுத்துவரும் முயற்சிகளுக்கு, தனது ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மனித வாழ்வும் அழகானது மற்றும் புனிதமானது என்ற நற்செய்தியைப் பகிர்வதற்கு, நாம் எல்லாரும் சிறப்பான முறையில் அழைக்கப்பட்டுள்ளோம் எனவும், வாழ்வு கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் எல்லாருக்கும், தனது ஆதரவையும், அப்போஸ்தலிக்க ஆசீரையும் வழங்குவதாகவும், திருத்தந்தை கூறியுள்ளார்.

இதற்கிடையே, இங்கிலாந்து மற்றும் வேல்ஸில், நான்கு பெண்களில் ஒருவர், மற்றும் ஆறு ஆண்களில் ஒருவர், தங்கள் வாழ்நாளில் வீடுகளில் உரிமை மீறல்களால் துன்புறுகின்றனர். இங்கிலாந்தில், ஒவ்வொரு வாரமும், தனது துணைவரால், இரண்டு பெண்கள் கொலைசெய்யப்படுகின்றனர் என்று, ஆயர் ஜான் ஷெரிகான் அவர்கள் கூறியுள்ளார்.

# போதைப் பொருள் தினம்

இன்று எமது நாட்டில் போதைப்பொருள் கடத்தலும், விற்பனையும்,பாவனையும் தலைவிரித்து தாண்டவமாடுகிறது. போதைப்பொருள் விற்பனை எந்தளவுக்கு பரந்து விரிந்துள்ளது என்றால், பாடசாலை மட்டத்திலே சென்று மாணவச்செல்வங்கள் விரும்பி உண்ணும் திண்பண்டங்களுடன் கலந்து விற்பனைசெய்யும்அளவுக்கு அழிவின் உச்சத்தைத் தொட்டு விட்டது.

இவ்வாறான நிலை எமது பாடசாலை வாயிலிலும் நடக்கிறது, ஒவ்வொரு பிள்ளைகளும் இத்தீய வழிக்கு விலைபோகிறார்கள் என்று தெரிந்தும் சகல அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் பெரியோர் என அனைவரும் கண்மூடி, வாய்பொத்தி காது கேளாது நடமாடிக்கொண்டு இருக்கிறோம். எப்படி இவ்வழியைத்தடுப்பது என்பது தெரியாத போராட்டத்திற்குள் அகப்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

திருச்சபை, பங்கு மட்டத்தில் போதைப்பொருளுக்கு எதிரான போராட்டங்கள் நடத்தினாலும் அது எந்தளவுக்கு எம் குடும்பங்களுக்குள் ஊடுருவி சென்றுள்ளது என ஒவ்வொருவரும் தத்தமது குடும்ப நடவடிக்கைகளை சுய ஆய்வு செய்து தம்மைத் தாமே திருத்திக்கொண்டால் மாத்திரமே போதைப்பொருள் எமது குடும்ப பிள்ளைச் செல்வமணிகளை அழிக்காமல் அதிலிருந்து பாதுகாக்க முடியும். இந்த சுயசோதனை எமது குடும்பம், சூழல், சமுதாயம், நாடு என விரிந்துச் செல்ல வேண்டும்.

முதலில் குடும்பத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும். குழந்தை தாய்-தந்தையிடமிருந்து உருவாகி எப்படி குடும்பத்தில் பிறந்து வளர்ந்து சமூகத்திற்கு அடியெடுத்து வைக்கிறதோ அவ்வாறே நல்ல அன்பு சூழலில், அரவணைத்து, கரிசணையோடு பெற்றோரால் வளர்க்கப்படும் பிள்ளைகள் மத, கலாச்சார, பண்பான விழுமியங்களில் வளர்ந்து சமூகத்திற்கு வரும்போது நல்ல சமூகத்தை உருவாக்கும் மன வலிமை, தன்னம்பிக்கை, வளமான எதிர்காலம் ஆரோக்கியமான சந்ததி என பெருகிக்கொண்டே செல்லும்.

ஆனால் அதே குடும்பத்தில் சிறிய சிறிய ஓட்டை, ஒடிசல்கள், வெடிப்புக்களை பெற்றோர் - பெரியோர் உருவாக்கும்போது ஆரோக்கியமான சந்ததி உருவாகாது. குறைபாடுள்ள, நோய்வாய்பட்ட, மனநோய் உள்ள, மனசிதைவடைந்த கொடூர சந்ததியே உருவாகும்.

எமது குடும்பங்களில் உள்ள ஓட்டை ஓடிசல்,வெடிப்புகள் என்ன என்று ஆராய்வோமா?

1. இரு இளம் உள்ளங்கள் நீண்ட எதிர்கால எதிர்பார்ப்புகளுடன் திருமண வாழ்வில் அடியெடுத்து வைக்கும்போது அவர்களின் மகிழ்ச்சியை ஆரம்பிக்கும், வெளிப்படுத்தும் ஒன்றாக மது,போதையை தேர்ந்தெடுக்கிறார்கள். அவ்வாறான மகிழ்ச்சியை எமதுபெற்றோர் பெரியோரால், நண்பர்களால் முன்வைக்கப்படுவதே வேதனைக்குரிய ஒன்றாகிறது.
2. குடும்பத்தில் விசேஷங்களில் ஒன்று இரண்டு நண்பர்கள் பெரியோர்கள் கூடும்போதும் மது, போதைக்கு **அது இல்லாமலா...** என கூறி குதூகலத்துடன் முதலிடம் கொடுக்கிறோம். விசேஷம் எனும்போது பிறந்தநாள், ஞானஸ்நானம், முதல் நற்கருணை, உறுதிபூசுதல், பங்கு திருவிழாக்கள், அதிக உறவினர்கள் நண்பர்கள் கூடும்போது மாத்திரமல்ல, ஒருசிலர் கூடும் நிகழ்வுகளிலும் இந்த விலக்கப்பட வேண்டிய மதுபானம் மது போதைக்கு முன்னுரிமை கொடுக்கிறோம்.


இவை அனைத்தையும் எம் வீட்டு செல்வங்கள் கவனித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்கள் தம்மை அறியாமலேயே, தமது பிஞ்சு உள்ளத்திலே **நானும் வளர்ந்து மது அருந்தி சந்தோசப்படுவேன்** என சொல்லிக் பச்சமரத்து ஆணி போல பதித்துக்கொள்கிறார்கள், இக்கட்டுரையை வாசிப்பவர்கள் உங்கள் சிறு பிராயத்தை நினைவு படுத்திப்பார்த்தால் ஆரம்பம் எங்கிருந்து வந்தது என்பது புலப்படும். (ஒருசிலர் விதிவிலக்காக இருக்கலாம்)

சில பிள்ளைகள் தமது பெற்றோரிடம், பெரியோரிடம் பிஞ்சு வாய் திறந்து 'மது அருந்துவது பிழைதானே' என்றால், **அது இருந்து ஒருதடவை என்றால் பரவாயில்லை** என கூறி அவர்களின் ஆழ்மனதில் பதிந்த விடயத்தை மேலும் உறுதியாக்கி விடுகிறோம்.

குடும்பத்தில் ஆரம்பமாகும் இந்நிலையே சூழலை, சமூகத்தை நாட்டை சீரழிக்க போதுமான முதல் படியாகும்.

இந்த சீரழிவு பெற்றோர் பெரியோராகிய எம்மைப் பொறுத்தவரையில் கௌரவமான, பெருமைக்குரிய, மற்றவர்களின் பாராட்டுக்கு, புகழ்ச்சிக்குரிய விடயமாக கருதி மார்தட்டிக்கொள்கிறோம்.

3. ஆண்கள்-தந்தையர்கள் கூடி மது அருந்துவதற்கு பெண்கள்-தாய்மார்கள் முக்கிய பங்குதாரராக இருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. (ஒரு சிலர் விதிவிலக்காகும்)



திருச்சபை போதை பொருளுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது அதி. மேதகு மெல்கம் கார்தினால் ரஞ்சித் ஆண்டகை எம் ஒவ்வொரு குடும்ப அங்கத்தவர்களிடமும் கேட்டுக்கொண்ட விடயம் எமது பிள்ளைகளை காப்பாற்ற வேண்டுமென்றால், எமது நாட்டை காப்பாற்ற வேண்டுமென்றால் குடும்ப நிகழ்வுகளிலிலும் வேறு பொது நிகழ்வுகளிலும் போதை பொருள், மதுபானம் பாவிக்காமல் தடுக்குமாறு கேட்டுக்கொண்டார்கள்.

நான் எவ்வாறு எனது குடும்பத்தில் எமது பிள்ளைகளுக்காக எமதுஎதிர் கால சந்ததிகளுக்காக, எமது நாட்டுக்காக எனது விருப்பம், ஆசைகளிலிருந்து வெறுமையாகி, அர்ப்பணமான வாழ்வு வாழ, தீர்மானம் எடுத்துள்ளேன்?

**ஆக்கம் மேரி**

**உன் நல்ல வழிமரபில் நம்பிக்கை வைத்து, உன் விதையை அங்கே விதை**
(சீராக் 26:20)



# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்

(மத் 6:9)

பகுதி – 20

## மாற்று வழியில் இறைவேண்டல்

இறைவேண்டல் என்பது வாழ்வில் வெளிப்பட வேண்டும். நமது வாழ்வு இறைவனுக்குச் சான்று பகர்வதாக இருக்கும்போது, அதுவே ஒரு செபமாக மாறுகிறது. கடவுளின் தீவிர சாட்சியாக வாழ்ந்து, இறையாட்சியின் அடையாளமாகத் திகழ்வது ஒரு சிறந்த செபமுறை என்பதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது.

விவிலியத்தில் இத்தகைய மாற்று வாழ்வியல் சான்றுகள் பலரைப் பார்க்கிறோம்.

### 1. திருமுழுக்கு யோவான்

இயேசு மக்களோடு ஒன்றாகக் கலந்து இறைபணியாற்றிக் கொண்டிருந்த அதே காலக்கட்டத்தில், திருமுழுக்கு யோவான் ஒரு தீவிர மாற்று வாழ்வியல் சான்றாக இருந்தார். அவர் மக்களைவிட்டு விலகி, பாலைநிலத்தில் வாழ்ந்தார். அவர் ஒட்டக முடியாலான ஆடையை அணிந்திருந்தார். தோல் கச்சையை இடையில் கட்டியிருந்தார். வெட்டுக்கிளியும், காட்டுத் தேனும் உண்டுவந்தார். (மத் 3:4)

இவ்வாறு உணவு, உடை, வாழுமிடம், போதனை என அனைத்திலும் தீவிர மாற்று வாழ்வியலாளராக விளங்கினார். அவரது வாழ்வும், பணியும் மக்களுக்கு மாபெரும் அறைகூவலாக விளங்கியது. மக்கள் யோவானை இறைவாக்கினர் என்று உறுதியாய் நம்பியிருந்தனர் (லூக் 20:6) என்று வாசிக்கிறோம். அவரைப் பார்த்துப் பரிசேயர்களும், மறைநூல் அறிஞர்களும் அஞ்சினர். ஏன் ஏரோது அரசன் கூட அஞ்சினான், காரணம், யோவான், நேர்மையும் தூய்மையும் உள்ளவர் என்பதை ஏரோது அறிந்திருந்தான் (மாற் 6:20)

### 2. இறைவாக்கினர் கைம்பெண் அன்னா

கணவனை இழந்து விட்டால் வாழ்வே முடிந்துவிட்டது என்று கருதி, தங்கள் வாழ்வு வட்டத்தைச் சுருக்கிக் கொள்ளும் பெண்கள் இன்றளவும் நம்மிடையே உள்ளனர். ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த அன்னா, ஒரு மாற்று வாழ்வியல் சான்றாகவும், இன்றைய பெண்களுக்கும் எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறார்.

அவரைப் பற்றிய போதுமான குறிப்புக்களை லூக்கா நற்செய்தியாளர் தமது நூலில் பதிவுசெய்துள்ளார். ஆசேர் குலத்தைச் சேர்ந்த பானுவேலின் மகளாகிய அன்னா என்னும் இறைவாக்கினர் ஒருவர் இருந்தார். அவர் வயது முதிர்ந்தவர். மணமாகி ஏழு ஆண்டுகள் கணவரோடு வாழ்ந்தபின் கைம்பெண் ஆனவர். அவருக்கு வயது எண்பத்து நான்கு. அவர் கோவிலை விட்டு நீங்காமல் நோன்பிருந்து மன்றாடி அல்லும் பகலும் திருப்பணி செய்துவந்தார். (லூக் 2:36-37).

அவர் கோவிலிலேயே தங்கியிருந்தார், நோன்பிருந்தார், மன்றாடினார், திருப்பணி செய்தார் என்னும் நான்கு செய்திகளும் அவரை ஒரு மாற்றுச் சிந்தனையாளராக, செயல்பாட்டாளராகக் காட்டுகின்றன.

### 3. இறைவாக்கினர் தானியேல்

தானியேலும், தோழர்களும், பாபிலோனிய அரசன் நெபுகத்னேசர் காலத்தில் அரண்மனையில் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களில் தானியேலும், அவரது தோழர்களாக அனனியா, மிசாவேல் மற்றும் அசரியாவும் அடங்குவர். மற்ற இளைஞர்கள் அரசரது சிறப்புணவிலும், திராட்சை இரசத்திலும் பங்குபெற்றனர். ஆனால், அந்த உணவுகளால் தம்மைத் தீட்டுப்படுத்திக் கொள்ளலாகாது என்று தம் உள்ளத்தில் உறுதி செய்துகொண்ட (தானி 1:8-16) தானியேல், அலுவலர் தலைவனிடம் சிறப்பு அனுமதி பெற்று, மரக்கறி உணவையே உண்டுவந்தார் என்று வாசிக்கிறோம்.

விரைவு உணவுகளைச் சுவைத்துப் பழகிவிட்ட இன்றைய இளைய தலைமுறையினருக்குத் தானியேலும், அவரது தோழர்களும் ஓர் அறைகூவலாக இருக்கின்றனர் என்பது கண்கூடு.

### 4. இறைவாக்கினர் சாமுவேல்

தாய் அன்னா இறைவனிடம் தவமிருந்து பெற்ற பிள்ளை சாமுவேல். அவர் குழந்தைக்காக இறைவனிடம் மனம் கசந்து மன்றாடியபோது, “எனக்கு ஓர் ஆண் குழந்தையைத் தருவீரானால், அவனை அவன் வாழ்நாள் முழுவதும் ஆண்டவராகிய உமக்கு ஒப்புக்கொடுப்பேன். அவனது தலைமேல் சவரக் கத்தியே படாது” (1 சாமு 1:11) என்று பொருத்தனை செய்துகொண்டார்.

அதன்படி, சாமுவேல் பிறந்ததும் அவனைக் கோவிலுக்கு எடுத்துச் சென்று அவன் தன் வாழ்நாள் அனைத்தும் ஆண்டவருக்கே அர்ப்பணிக்கப்பட்டவன் என்று சொல்லி, சாமுவேலை இறைப்பணிக்கெனக் கையளித்தார். தமது குழந்தை இறைவனின் கொடை, எனவே, தனக்குச் சொந்தமல்ல, இறைவனுக்கே சொந்தம் என்று அர்ப்பணித்த செயல் ஒரு மாற்று வாழ்வியல் செயல்பாடுதானே!

### 5. தோபித்து

சனகெரிபு கொன்ற யூதர்களின் உடல்களை சட்டத்தை மீறி, யூத முறைப்படி அடக்கம் செய்யும் பணியை மிகவும் துணிவுடன் செய்துவந்தார் தோபித்து (தோபி 1:18). இவ்வாறு செய்ததால், அவரது உடைமைகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு, அரண்மனைக்குக் கொண்டு செல்லப்பட்டன. மனைவி அன்னாவையும், மகன் தோபியாவையும் தவிர அவருக்கு எதுவும் எஞ்சியிருக்கவில்லை (தோபி 1:20) இருப்பினும், மீண்டும் அவர் இறந்தோரை நல்லடக்கம் செய்யும் பணியைத் தொடர்ந்தார்.

அவரது இந்தப் பணி மற்ற யூதர்களுக்கு அச்சத்தையும், அறைகூவலையும் தந்தது எனலாம். அவர்கள் இவனுக்கு அச்சமே இல்லையா? இத்தகையதொரு செயலைச் செய்ததற்காகத்தானே ஏற்கனவே இவனைக் கொல்லத் தேடினார்கள். இவனும் தப்பியோடினான். இருப்பினும் இறந்தவர்களை மீண்டும் அடக்கம் செய்கின்றானே (தோபி 2:8) என்று கூறினர்.

### 6. இயேசு

தம் காலச் சமய, சமூக, அரசியல் சூழல்களைக் கடந்து, மாற்றிச் சிந்தித்து, மாற்றிச் செயல்பட்டு, இந்த உலகை மாற்றியவர் இயேசு. அவரது போதனைகள், நலமளிக்கும் செயல்பாடுகள், ஓய்வுநாள் சட்டம் போன்றவற்றை உடைக்கும் துணிவு, தலைசாய்க்கவும் இடமின்றி நடமாடும் போதகராகவே வாழ்ந்த வாழ்வு, ஏழைகள், ஒதுக்கப்பட்டோர், பெண்கள் ஆகியோருடன் அவர் கொண்டிருந்த பரிவுணர்வு இவை அனைத்துமே மாற்று வாழ்வியல் சான்றுகளே.

விவிலியம் காட்டும் இந்த மாற்று வாழ்வியல் சான்றோரைப் பின்பற்றி, நாமும் பிறருக்கு அறைகூவல் விடுக்கும் வண்ணம் வாழ்ந்து காட்டவேண்டும். குறிப்பாக, இன்றைய உலகமயமாக்கப்பட்ட, வணிக நோக்குடைய, நுகர்வு வெறிகொண்ட சூழலில் மக்களுக்குச் சவால் விடுக்கும் வண்ணம் வாழ்வது ஒரு சிறந்த இறைவேண்டலே.

**அந்த வழியில் சில பரிந்துரைகள் இங்கே முன்வைக்கப்படுகின்றன.**

1. இறைச்சி உணவைத் தவிர்த்து, காய்கறி உணவு மட்டுமே உண்பது.
2. தங்க நகைகள் அணியாமல் வாழ்வது.
3. அலைபேசி, தொலைக்காட்சிப் பயன்பாட்டைக் குறைத்தல்.
4. செருப்பு அணியாமல் வாழ்தல்.
5. அதிக ஆடைகள், உடைமைகள் இன்றி எளிமையாக வாழ்தல்.
6. மணத்துறவு கொள்தல்
7. பதவி, இடம், பட்டம் இவற்றில் பற்றின்றி வாழ்தல்.
8. சாதியை மறுத்து, அனைவருடனும் நட்புறவுடன் வாழ்தல்.
9. ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் எழுப்புதல்.
10. பிளாஸ்டிக் பொருட்கள், குளிர்பானங்கள் தவிர்த்தல்.

மேற்சொன்னவை சில மாதிரிகள் மட்டுமே. இன்னும் எத்தனையோ வழிகளில் நாம் மாற்று வாழ்வியல் நடைமுறைகளைச் செயல்படுத்தலாம். விருப்பமிருந்தால் தீவிர மாதிரிகளாக நாம் திகழலாம். அதுவும் சிறந்த செபமே.

தொடரும்

## புனிதர்கள் பேதுரு, பவுல் (திருத்தூதர்கள்)

இருவரையும் இயேசு அழைத்தார். பேதுரு இயேசுவோடு இருந்தவர். பவுல் இயேசுவின் உயிர்ப்பிற்குப்பின் அழைக்கப்பட்டவர். இருவரும் மறைசாட்சி மரணத்தைத் தழுவியவர்கள். இருவரும் திருச்சபையின் தூ-ண்கள் என அழைக்கப்படுபவர்கள். பேதுரு எருசலேமில் இயேசுவை அறிவித்தார். திருச்சபைக்குத் தலைவராக இயேசுவால் அறிவிக்கப்பட்டவர். திருச்சபையின் முதல் திருத்தந்தை. பவுல் கிறிஸ்துவத்தை வெளி உலகுக்கு அறிமுகம் செய்தவர். பவுல் தன் பணியின் காரணமாக 13ம் திருத்தூதர் என அழைக்கப்பட்டார். இருவருமே உரோமிலுள்ள மாமர்டைன் சிறையில் அடைக்கப்பட்டவர்கள். பேதுரு உரோமில் கி.பி 64ல் நீரோ மன்னன் காலத்தில் சிலுவையில் தலைகீழாக அறையுண்டு இறந்தார். பவுல் உரோம் நகரிலிருந்து 3 மைல்களுக்கு அப்பாலிருந்த சால்வியனில் தலை வெட்டுண்டு மரித்தவர். இருவர் கல்லறைகளும் உரோமிலுள்ளன. பேதுருவின் கல்லறை மீது வத்திக்கான் பேராலயம் உள்ளது. பவுலின் பெயரால் அமைந்துள்ள பேராலயத்தில் அவரது கல்லறை அமைந்துள்ளது.



# கனவில் வந்த இறைவனின் செய்தி

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம் என்பது உலகம் அறிந்த ஒன்றாகும். இன, மத, மொழி, வேறுபாடின்றி ஒவ்வொருவரும் **ஒரு முறை என்றாலும் இவ்வாலயத்திற்குள் சென்று வரும் பாக்கியம் பெற வெண்டும்** என ஏங்குபவர்கள் பலர். கோடி அற்புதங்கள் புரியும் புனித அந்தோனியார் என்றதும் பக்தர்களின் உள்ளத்தின் ஆழத்தில் இனம் புரியாத பரவசமும் புத்துணர்ச்சியும் ஏற்படுகிறது என்பது அநேகர் பெற்ற அனுபவித்த வரப்பிரசாதமாகும்.

எமது நாட்டில் நடந்த 1973ம் ஆண்டு இன கலவரத்திலோ 1983ம் ஆண்டு நடந்த இன கலவரத்தின்போதோ 2004ம் ஆண்டு ஏற்பட்ட ஆழி பேரலையிலோ(சுனாமி) கொழும்பு கொச்சிக்கடை வாழ் மக்கள் பாதிக்கப்படவில்லை. புனித அந்தோனியார் பெருஞ்சுவர் எழுப்பி இவ்வூர் மக்களையும் அவரை நாடி ஓடி தேடிவரும் மக்களையும் பாதுகாக்கின்றார் என்பது அவரின் அற்புதத்தை உள்ளூர உணரும் மக்களின் மறுக்க முடியாத மறக்க முடியாத உண்மையும் அனுபவமுமாகும்.

அற்புதரான புனித அந்தோனியார் ஆலயத்திலே கடந்த பாஸ்கு ஞாயிறன்று தமிழ் திருப்பலியில் நடந்த அனர்த்தம், திருமுழுக்கு வாக்குறுதி புதுப்பிக்கப்பட்டு மெழுகுத்திரிகளை அனைத்ததுடனே சதிக்காரர்களின் சூழ்ச்சியினால் மனித வெடிகுண்டு கொடூர தாக்குதல் நடத்தப்பட்டது. அதிக தமிழ் மக்களும் சிங்களம் முஸ்லிம் என சிலருமாக சிறுவர் பெரியோர் வேறுபாடின்றி 65க்கும் மேற்பட்ட உயிர்கள் சிதறடிக்கப்பட்டன. பலர் உடல், மன காயங்களுக்கு உள்ளானார்கள்.

**பல பக்தர்களின் அரணாக இருக்கும் புனித அந்தோனியார் ஏன் இந்த அனர்த்தத்தைத் தடுக்க வில்லை?**

போன்ற சில கேள்விகளும் சந்தேகங்களும் ஒரு சிலரின் மனதில் தற்காலிகமாக ஏற்பட்டு விரைவாகவே மறைந்தும் போயின. இவ்வனர்த்தம் ஏற்பட முதல் புனித அந்தோனியார் பலரின் கனவுகளின்மூலம் நடக்க இருக்கும் அனர்த்தத்தை வெளிப்படுத்தினார். ஆனால் மந்த புத்தியுள்ள எம்மால் அதை விளங்கிக்கொள்ள முடியாது போனதற்கான காரணம் நாம் இறைவனோடு இணைந்து வாழ்வது போதாது. அவ்வாறு கனவுகள் கண்ட ஒருசிலரின் அனுபவங்கள் இதோ...!

**திருமதி லீமா**

தாக்குதலுக்கு ஒரு சில தினங்களுக்கு முன்பாக (பரிசுத்த வாரம்) எனது மனதிலே ஒருவிதமான பயம் ஆட்கொண்டது. **எனக்கு ஏதோ ஒரு ஆபத்து நடக்கப்போகிறது. நான் இறக்கப் போகிறேன்;** என்ற உணர்வு என்னை வாட்டிக்கொண்டிருந்தது. பின்பு நான் புனித அந்தோனியார் ஆலயத்தில் நற்கருணைநாதர் முன்னிலையில் மண்டியிட்டு அழுது செபித்தேன். பின்பு வீட்டுக்கு வந்து எனது கையடக்கத் தொலைபேசியிலே பாடல் பாடி பதிவு செய்து, எனது வீட்டிலுள்ளவர்களுக்கு கொடுத்து நான் இறக்கப்போவதைப் பற்றிய உணர்வை கூறினேன்.

நான் உயிர்த்த ஞாயிறு திருப்பலியில் இருக்கும்போது ஏதோ ஒரு பாரிய சத்தம் கேட்டது. நான், மின்சாரம் பாதிப்பு ஏற்பட்டது என நினைத்தேன். என் அருகில் இருந்த ஒரு பெண்மணி சாய்ந்து விழுந்தார். எனக்கு என்ன செய்வது என தெரியாமல் விழுந்தவர்களையும் தாண்டி பதறிக்கொண்டு வெளியில் ஓடி வந்த பின்பு, எனது மகன் ஆலயத்திற்குள் இருந்தார் என்ற ஞாபகம் வந்தது. மீண்டும் போய் பார்க்கும்போது அவர் அம்பலன்ஸ்க்கு தொலை அலைப்பை ஏற்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி புரிந்துக் கொண்டிருந்தார். பின்பு நான் அருகில் உள்ள தொடர் மாடியிலேயே என் வீடு இருந்தது. அங்கு போன பின்பே குண்டு வெடித்துள்ளது என அறிந்தேன்.

அதன் பின்பு தான் விளங்கியது நான் கண்ட கனவுகள் அனைத்தும் புனித அந்தோனியார் இவ்வழிவைப் பற்றியே கூறியிருக்கிறார். என்று வேதனையோடும் கலக்கத்தோடும் கூறினார்.

**திருமதி பத்மா**

இவர் ஒரு இந்து சகோதரி. பரிசுத்த வாரத்தில் என்னிடம் வந்து சொன்னார் 'அக்கா நான் ஒரு கெட்ட கனவு கண்டேன். உள்ளத்திலே ஒரு விதமான கலக்கம் கலந்த பயம் உறுத்திக்கொண்டு இருக்கிறது. கனவு கண்டு விழிக்கும்போது எனது அப்பாவிடம் இருந்து தொலைபேசி அலைப்பு வந்தது, **நானும் அம்மாவும் ஊருக்கு வெளிக்கிட்டு விட்டோம். சென்று வருகிறோம்** என்றார். அவர்களை போகாதீர்கள் நான் கெட்ட கனவு கண்டேன் என கூற முடியுமா? நான் சரி என கூறி அழுதேன். அவர்களுக்கு ஏதும் ஆபத்து ஏற்படப்போகிறதோ என தெரியாதே... என்றார். நான் கேட்டேன் அப்படி என்ன கனவு கண்டீர்கள். அவர் தொடர்ந்து சொன்னார், **செபமாலை மாதா என்னிடம் வந்து ஏதோ சொல்லுகிறார்கள். அவர்கள் கதைத்த எதுவுமே எனக்கு கேட்க வில்லை.** ஏன் எனக்கு அவர்கள் கதைப்பது கேட்கவில்லை என யோசித்துக்கொண்டு இருப்பதைப் போல் கனவு கண்டேன். அதைத் தொடர்ந்து இன்னுமொரு கனவு, **ஒரு கட்டிடத்திலிருந்து பிரவுன் நிற அங்கி அணிந்த ஒரு திருச்சுரூபம் மேலிருந்து உருண்டுக் கொண்டு வந்து விழுகிறது. நான் கதறி கதறி அழுகிறேன். உடனே விழித்துக் கொண்டேன். என் கணவரிடம் கேட்டேன் நான் அழுத சத்தம் கேட்டதா? என அவர் இல்லை என்றார்.** எனது அம்மாவின் வீடு ஆலயத்திற்கு பக்கத்தில் உள்ள ஒரு தோட்டத்திலேயே உள்ளது என்றார். பின்பு அனர்த்தம் ஏற்பட்ட பின்பு கூறினார் நான் கண்ட கனவு இந்த அனர்த்தத்தையே காட்டியுள்ளது.



**இன்னுமொரு ஆசிரியர் கூறினார்**

அவர் ஒவ்வொரு செவ்வாய் கிழமையும் தவறாது புனித அந்தோனியார் ஆலயத்திற்கு செல்வதாக கூறினார்.

கனவில் ஒரு நாள் புனித. அந்தோனியார் ஆலயத்திற்கு செல்லும்போது **ஆலயத்தில் எந்த விதமான திருச்சுருவங்களும் இல்லை. வெறுமையாக இருந்தது. பின்பு நான் நினைத்தேன் நற்கருணை நாதரிடம் போய் செபிப்போம் என எனக்குள் கூறி ஆலயத்திற்குள் சென்று பார்த்தால் நற்கருணை ஆண்டவரும் இல்லை. நான் எனது தலையில் அடித்து அழுதுக்கொண்டு வெளியில் ஓடி வருகிறேன்.** ஆனால் நான் நினைக்க வில்லை ஆலயத்திற்கு ஆபத்து வரும் என்று. எனக்கு அல்லது எனது குடும்பத்திற்கு ஏதோ ஆபத்து வரப்போகிறது என்று தான் நினைத்தேன். உருக்கமாக செபித்தேன்.

**செல்வி மேகலா**

**நான் கனவிலே எமது வீடு இடிந்து விழுவதைப்போல் கண்டேன்.** உடனே எழுந்து அந்த பயங்கரத்தை இறைவனிடம் ஒப்புக்கொடுத்து செபித்தேன். குடும்பத்தில் உள்ளவர்களிடமும் சொன்னேன். அவர்களும் தொடர்ந்து செபித்தார்கள்.

**திருமதி மேரி**

சாதாரணமாகவே நான் என்ன கனவு கண்டாலும் மறந்து விடுவேன். பரிசுத்த வாரத்திற்கு இரண்டு வாரத்திற்கு முதலிருந்தே ஏதோ ஆபத்தான பயங்கரமான கனவு கண்டுக்கொண்டிருந்தேன். அது என்ன என்று எவ்வளவு நினைத்தாலும் நினைவுக்கு வரவில்லை. ஆனால் கனவு கண்டதின் விளைவுகளான பயம், கலக்கம், இனம் புரியாத திகில் ஏற்பட்டது. பாஸ்கு காலம் என்பதால் பல ஒருத்தல்கள் செய்து இறைவனோடு வாழ்ந்து வந்த காலகட்டம். நான் எனது குடும்பத்தில் கணவன், பிள்ளைகளிடம் நான் பயங்கர கனவு கண்டேன். ஆனால் அதைசொல்ல முடியாதவாறு மறந்து விட்டது. அதனால் கண்ட கனவு மறந்தாலும் எனக்குள்ளே பலவிதமான இனம்புரியாத கலக்கம் ஏற்பட்டுள்ளது. அதனால் ஆண்டவர் ஏதோ சொல்கிறார்? என்ன சொல்கிறார்? என்று விளங்க வில்லை. எமது குடும்பத்திற்கு ஏதோ ஆபத்து வரப் போகிறது என்றே தோன்றுகிறது என கூறினேன். ஆயினும் நாம் தொடர்ந்து செபமாலை சொல்வதைத் தவிர சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் செபமாலை மனதாலே சொல்லிக் கொண்டிருங்கள்; என கணவனிடமும் பிள்ளைகளிடமும் கூறி, நான் தொடர்ந்து சமைக்கும்போது, பஸ்ஸில் போகும்போது சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மௌனமாக செபமாலை

15ம் பக்கம்

**பேராயர் மன்றம் பொதுநிலையினரை தொடர்ந்து உபவாசத்துடன் செபிக்குமாறு அழைப்பு விடுத்திருக்கிறது. உள்ளத்தின் ஆழத்திலே இறைவன் செபிக்க அழைக்கிறார் என உணரும் அனைவரும் தொடர்ந்து உபவாசத்துடன் செபிப்பதை இறைவன் எதிர்பார்க்கிறார்**

ஆக்கம்
அனசிலின்
பர்னாந்து

# எமது பங்குத் தந்தை

**ஆதித் திருச்சபையின் அடிப்படைக் கொள்கைகளை நினைவு படுத்தி இல்லங்கள் தோறும் திருப்பலியுடன் கூடிய இறையாசீரும் வழங்க களமிறங்கினார் எங்கள் ஆன்ம குருவும் புனித லோறன்ஸ் ஆலய பங்குத் தந்தையுமாகிய அதி வணக்கத்திற்குரிய குருமுதல்வர் மனோகுமாரன் நாகரட்ணம் அடிகளார்**

உயிர்ப்பு விழா இருளில் மூழ்கியது. அன்றிலிருந்து ஆலயங்கள் யாவும் மூடப்பட்டன. மக்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லத் தயங்கினர். வீதிகள் வெறிச்சோடி மக்கள் நடமாட்டம் இல்லாத சூழ்நிலை, மீண்டும் போரா? என்ற கேள்விகளும் மக்களிடையே பரவலாக பேசப்பட்டது. அத்துடன் 75 ஆண்டுகளுக்கு மேலாக பழமை வாய்ந்த புனித லோறன்ஸ் ஆலயம் எந்த ஒரு காரணத்திற்காகவும் மூடப்படவில்லை? திருப்பலி நடைபெறாத நாளும் இல்லை. வாழ்க்கை முறையில் திருத்த முடியாத கோட்பாடுகளும் எம்மிடம் இருக்கின்றன. எது எப்படி இருந்தாலும், நாளாந்த திருப்பலி ஓர் வரப்பிரசாதம் என நம்பிக்கையுடன் பங்குபற்றும் மக்களும் உண்டு. ஞாயிறு திருப்பலி மட்டும் நமது கடமை, கட்டளை இதுதான் கத்தோலிக்கர் என்று மார்தட்டுவோரும் உண்டு. ஆனால் இரண்டு கிழமைகள் திருப்பலிகள் இல்லை. ஆலயத்தை பார்த்தவுடன் கண்கள் குளமாகியது. கத்தோலிக்க மக்கள் மட்டுமல்ல இந்து மக்களும் தமது கவலையை வெளிப்படுத்தினார்கள். இதற்கெல்லாம் பெரிய ஔடதமாக இல்லங்கள் தோறும் திருப்பலி நிறைவேற்றினார் எங்கள் அன்புப் பங்குத் தந்தை. எமது வாழ்க்கையில் மறக்க முடியாத நாட்கள். நோயாளிகள், வயது முதிர்ந்தவர்கள், பங்குக் குழு மக்கள் என எல்லோருக்கும் பெரிய வரப்பிரசாதமும் மகிழ்ச்சியும் என்று சொன்னால் மிகை இல்லை தமிழில் மிகவும் இனிமையாகவும், சுருக்கமாகவும் அருளுரைகளை ஆற்றினார். எங்கள் பங்குத் தந்தை மிகவும் அமைதியானவர். இல்லை என்று சொல்லி வழியனுப்பி வைக்கமாட்டார். பாரிய வேலைப்பளுவுக்கு மத்தியிலும், நேரம் தவறாமல் திருப்பலி நிறைவேற்ற விரைந்துவருவார். **அந்த திருப்பலிகள் எவ்வளவு இனிமையாக இருந்தது. புதிய அனுபவமாகவும் இருந்தது.** எல்லோரும் மகிழ்ச்சியடைந்தோம். ஆனால் அந்த மகிழ்ச்சி நீடிக்க இறைவன் சித்தம் கொள்ளவில்லை. பங்குத் தந்தையின் இடமாற்றம் கவலையளிக்கிறது. அவருடைய சேவைகளும் ஆயுளும் நீடிக்க வாழ்த்துகின்றோம்.

திருப்பலி நடைபெற ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து முழு ஒத்துழைப்பையும் வழங்கிய பிரசீடியத்தின் தலைவி சகோதரி குஷி ராஜேஸ்வரன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

தகவல்: திருமதி ஜெசி அருட்பிரகாசம்

## 02 கொழும்பு உயர்மறைமாவட்டத்தின்...

**வெளிநாடு செல்லும் குருக்கள் [கல்வி / பணிகள் / விடுமுறை]**

01. அருட்தந்தை. ருவான் பிரதீப் பிரேமராஜ - அவுஸ்ரேலியா (படிப்பு)
02. அருட்தந்தை. சிசிர சமரக்கோன் - மிலான் இத்தாலி (ஆன்மீக பணி)
03. அருட்தந்தை. ருவந்த குமர பர்னாந்து - இத்தாலி, பெல்கோன (ஆன்மீக பணி)
04. அருட்தந்தை. சிரான் தாஷ - இத்தாலி, பிரிஸ்ட் (ஆன்மீக பணி)
05. அருட்தந்தை. டிசாந் லசந்த பெரேரா - இத்தாலி, முன்சா (ஆன்மீக பணி)
06. அருட்தந்தை. லாசாந் பிரமின - இத்தாலி கொனோனா (ஆன்மீக பணி)
07. அருட்தந்தை. ஜோசப் பிரான்சிஸ் ஜெயகொடி - விடுமுறை
08. அருட்தந்தை பிராசந்த சில்வா - விடுமுறை
09. அருட்தந்தை. டெவீஸ் கபிரியேல் - விடுமுறை
10. அருட்தந்தை. எட்மன் திலகரட்ண - விடுமுறை
11. அருட்தந்தை ரெவோ மார்ட்டீன் - விடுமுறை

**மாறுபட்ட**

01. அருட்தந்தை. ஸ்ரீநாத் மனோஜ் பெரேரா - சிறப்பு திட்டங்கள் மற்றும் நிர்மானங்களுக்கான பொறுப்பாளர்.
02. அருட்தந்தை சிசர பிரியசாந்த - பண்ணைகளுக்கான இயக்குனர் (வார்டாலா)
03. அருட்தந்தை. சம்பத் துஷார - தோட்டங்களுக்கு பொறுப்பாளர்
04. அருட்தந்தை பிரஷாத் டிலாந்த பர்னாந்து - நிலங்கள் மற்றும் சொத்துக்களுக்கு பொறுப்பாளரின் உதவியாளர்

## 01 புனித யோசேவ்வாஸ்...

கொழும்பு இறையியல் விரிவுரையாளர் அதி. வண. அருட்பணி அந்தனி பர்னாந்து புள்ளே அவர்கள், கடந்தவாரம் உரோம் உல்மானா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயர் மறைமாவட்டம் புனிதயோசேவ் வாஸ் இறையியல் நிலையத்தின் 15வது பட்டமளிப்பு விழாவின் போது மேற்கண்டவாறு கூறினார்கள்.

புனித யோசேவ் வாஸ் இறையியல் நிலையத்தில், கொழும்பு பேராயர் அதி.மேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் அவர்களின் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த பேராயர் இவ்வாறு கூறினார்.இலங்கை சூழல் கலாச்சாரத்திற்கேற்ப கிறிஸ்தவ மதத்தை வழிநடத்தி அதற்குத் தேவையான அத்தியவசியமான கலைவடிவமான கவிதைகளை கலாச்சாரத்திற்கு தந்த அவர், இசை, கவிதை, நடன நாடக திறமைகளினால் கத்தோலிக்க மதத்தை மாத்திரமல்ல, எமது சூழலினதும் கலாச்சாரத்தினதும் பகுதியாக எமது நாட்டுக்கு வழங்கினார் என்பதை புரிந்துக்கொள்ள எமது நாட்டு மக்களுக்கு முடிந்தது. பேராயர் கர்தினால் அவர்களினால் கிறிஸ்தவ கல்வி பற்றி கலைமாணி பட்டம் சூட்டப்பட்டதுடன் துணை ஆயர் மேதகு ஜே.டீ.அன்தனி ஆண்டகை உள்ளிட்ட அருட்தந்தையர்களும் அருட்சகோதரிகளும் இவ்விழாவில் கலந்துக் கொண்டனர்.

இறையியல் கல்லூரியின் அதிபர் அருட் தந்தை றொசான் சன்தன டயஸ் அவர்களினால் பட்டமளிப்பு விழா ஒழுங்கு செய்யப்பட்டதுடன் பேராயரினால் இறையியல் நிலையத்தில் புதிய இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அருட்தந்தையர்களும் அருட்சகோதரிகளும் பொது நிலையினர்களும் கலந்துக்கொண்டனர்.

**தகவல் : T. சுனில்**

## 01 கத்தோலிக்க..

கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2019ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இதற்கென அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படவுள்ளதாக 2019, வைகாசி மாதம் 31ம் திகதிக்கான வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தேர்வுக்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதி நாள் 28 - 06 - 2019 ஆகும்.

கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதி தேர்வில் தோற்றுவதற்கு பங்கு மாணவர்களை அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். பங்குத்தந்தை, தனது பங்கின் கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதி சான்றிதழ் தேர்வுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளினது மறைப்பாடசாலையின் தலைமையானவராக இருப்பதால் இத்தேர்வில் தோற்றுவதற்கு விண்ணப்பதாரரை ஊக்கப்படுத்தும் பொறுப்பு அவரை சார்ந்ததாக உள்ளது. ஆகவே பரீட்சைக்குத் தோற்றுமாறு மாணவர்களை ஊக்கப்படுத்தவும். விண்ணப்பப்பத்திரம் இதுவரை கிடைக்காத பங்குகளில், மறைப்பாடசாலையின் பெயர், முகவரி, விண்ணப்பதாரரின் எண்ணிக்கை ஆகியவை பங்குக் குருவினால் குறிப்பிடப்பட்டு பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவனம் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை), இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல. 1503, கொழும்பு என்ற முகவரிக்கு 14-06-2019 க்கு முன் அனுப்பப்பட வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 31-05-2019 வர்த்தமானியைப் பார்க்கவும்.

**நன்றி**

**அருட்தந்தை பியல் ஜானக்க பர்னாந்து**
**தேசிய மறைக்கல்வி இயக்குனர்.**

## 01 பரிசளிப்பு விழாவில்...

என கூறினார்கள். தொடர்ந்து தமது கருத்தைத் தெரிவித்த பேராயர் அவர்கள், கடந்த பாஸ்கு ஞாயிறில் எமது ஆலயங்களிலும் வேறு சில உணவகங்களிலும் நடந்த மனித படுகொலை வருடக்கணக்காக திட்டம் தீட்டி நடத்தப்பட்டது என்பதை நாம் அறிவோம். இந்நிலை எமது கிறிஸ்தவ மக்களுக்கு மாத்திரமல்ல முழு நாட்டிற்கும் நடந்த தாக்குதலாகும். இந்நிகழ்வில் காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன்ட் விக்ரமசிங்க ஆண்டகை, ஷெயாமோ பாலி ஸ்ரீ ரோகண பிரதேசத்தின் தலைமை அதிபதி உதுமகல ஸ்ரீ மகிந்தானந்தபிதான தலைமைக் தேரர் உட்பட பிக்குகளும் இந்நிகழ்வில் கலந்துக்கொண்டனர்.

**தகவல் : T. சுனில்**

## 14 கனவில் வந்த...

சொல்லி எனது குடும்பத்தை இறைவனிடம் ஒப்படைத்து வந்தேன். அதன் பின்பு தான் புனித அந்தோனியார் திருத்தல அனர்த்தம் ஏற்பட்டது. எமது செபத்தை விடாது தொடர்ந்து குடும்பமாக செபித்து வருகிறோம். இங்கு குறிப்பிடப்பட்டவர்கள் மாத்திரமல்ல பலர் இவ்வாறான கனவுகளை கண்டிருக்கிறார்கள். இவ்வாறான நிகழ்வுகளில் தெளிவாக என்ன தென்படுகிறது என்றால் இறைவன் ஏதேனும் தேவை ஏற்படின் செபிப்பதற்காக ஒரு சிலரைத் தேர்ந்தெடுத்துள்ளார். இந்த தேர்ந்தெடுத்தல் எமக்கு பெறுமதியாக விளங்க வில்லை. எனக்குள் ஏற்படும் உணர்வின் படி, எமது உலக வாழ்க்கையில் ஏதேனும் ஒரு விசயத்தை சரியாக தெளிவாக விரைவாக செய்ய வேண்டுமென்றால் ஒரு சிலரை நியமித்து அப்பொறுப்புக்களை ஒப்படைத்து செய்யுமாறு பணிப்பார். அவ்வாறான ஒரு பொறுப்பு வாய்ந்த பணிப்புரையே எமக்கு இறைவனால் வழங்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்ற ஒரு நிகழ்வு தான் இங்கும் ஏற்பட்டுள்ளது. இறைவன் அனைவருக்கும் இவ்வாறான கனவுகள் மூலம் எச்சரிக்கவில்லை. ஒரு சிலரையே தேர்ந்தெடுத்து கனவுகள் மூலம் செபிக்குமாறு கூறியிருக்கிறார். ஆலயத்திற்கோ, அல்லது எமது சூழலுக்குகோ, சமூகத்திற்கோ ஏதோ ஒரு அனர்த்தம் ஏற்படப் போகிறது என்று சொல்லி செபிக்குமாறு பணிக்கப்பட்டிருந்தால் நாம் எந்தளவுக்கு விழிப்போடு கலக்கத்தோடு, உபவாசத்தோடு செபித்திருப்போம்? அதனால் என்னவோ, எனக்கு, எனது குடும்பத்திற்கு ஏதோ ஆபத்து வரப்போகிறது என்ற உணர்வு ஏற்பட்டிருக்கிறது. அதனால் நாமும் செபத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்தோம். நாம் ஒரு குழுவாக ஓர் இடத்தில் கூடாவிட்டாலும், இறைவனின் பார்வையில் நாம் எங்கிருந்தாலும் இணைந்திருக்கிறோம். அதனால் எமது செபத்தை இயேசுவின் திருமுகத்தைப் பார்த்து ஏறெடுப்போம். அப்படியானால் இவ்வாறான கனவுகள் மூலம் எச்சரிக்கப்படுகிறோம் என உணர்பவர்கள் உடனடியாக கடவுள் எம்மை செபிக்குமாறு அழைப்பு விடுக்கிறார் என்று உணர்ந்து தொடர்ந்து சந்தர்ப்பத்தை உருவாக்கி செபத்தில் தரித்திருப்போம்.

அதேபோல் இயற்கையினூடாகவும் பரிசுத்த வாரத்தில் பெரிய வெள்ளி அன்று புனித அந்தோனியார் ஆலயத்திற்கு பின்புறம் மேகம் சிகப்பு நிறமாக மாற்றியதனூடாகவும் அனர்த்தத்தை வெளிப்படுத்தியுள்ளார். நாம் அதை வேடிக்கைப் பார்த்தோமே ஒழிய இறைவனின் குரலுக்கு செவிமடுக்கவில்லை.

அந்த புனித அந்தோனியார் திருத்தல பிரதியை 8ம் பக்கம் காணலாம்.

**எமது இணையத்தள முகவரி**
**http://www.colomboarchdiocesancatholicpress.com**


# ஆலயத் தளபாடங்கள்.

**எல்லாவகையான உயர்தரமிக்க ஆலயத் தளபாடங்கள்.**

- பலிபீடங்கள் மற்றும் பலிப்பீட விராந்தைகள்
- ஒப்புரவு கதிரைகள்
- வாசகமேடை
- வாங்குகள்,

**பாடசாலை மேசை, கதிரை, எல்லாவிதமான வீட்டுத் தளபாடங்கள்**

# MADHUWANTHA WOOD CRAFT

1/2, கட்டுப்பிட்டிய மாவத்தை, இன்டிபத்த, மொறட்டுவை.
1/63, லால இன்டிபத்த, மொறட்டுவை.

(08292)

**தொ.பே : 0722919553 0112654227 0728899227**





# மணமகன் தேவை

1993ம் ஆண்டு பிறந்த கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட B.com, CMA தகைமையுடைய தனியார் நிறுவனமொன்றில் கணக்காய்வாளராக பணிபுரியும் தமது மகளுக்கு படித்த இறைபக்தியுள்ள மகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (9699)

**தொடர்புகளுக்கு : 0750678862**

32 வயதுடைய, அழகிய, குணமான கத்தோலிக்க மணமகளுக்கு (மன அழுத்தத்திற்கு Treatment எடுப்பவர்) புரிந்துணர்வுடைய, நல்ல குணமான மணமகனை பெற்றோர் தேடுகின்றோம். (9534)

**தொடர்புகளுக்கு : 0777227808**



# மணமகள் தேவை

கொழும்பு முகத்துவாரம், றோமன் கத்தோலிக்கம் 1992ல் பிறந்த, கொமர்ஷல் வங்கியில் Junior ஆபிசராக பணியாற்றும் மகனுக்கு நற்குணமுடைய உயர்கல்வித் தகமையுடைய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (9560)

**தொடர்புகளுக்கு : 0775969691**


## 06 மனங்கவர்ந்த....

அனைத்தையும் தயக்கமின்றி ஒதுக்கி, மக்களைத் தேடிப் போய் அவர்களைத் தொட்டு அணைத்து குணமாக்கிய மனிதநேயம், மருத்துவமனை, சிறைச்சாலை என்று மறுக்கப்படும் இடங்களைத் தேடி போய் அங்குள்ள எளியவர்களின் பாதங்களைக் கழுவி முத்திமிடும் கருணை குழந்தைகள், நோயுற்றோர் மீது காட்டும் பரிவு, இளையோர் மீது கொண்டுவந்த நம்பிக்கை அவர்களை வழிநடத்தும் முறை இவை அனைத்தும் சேர்த்து தான் இத்தனை கோடி மக்களின் இதயங்களில் ஓர் இடத்தை தேடித் தந்துள்ளது.

தலைமைப் பதவிகளை பிடித்து அமர்ந்து கொண்டு அமர்க்களம் செய்யும் அரைகுரைகளின் மத்தியில் இப்படி ஒரு நல்ல மனிதரா? திருத்தந்தையிடம் இருந்து பயன்பெற்று மாற்று வாய்ப்பு நமக்கு நிறைய இருக்கிறது. தொடர்ந்து திருந்தந்தையின் முயற்சிகள் யாவும் வெற்றி பெறட்டும். நல்வாழ்த்துக்கள்.

## 07 மனங்கவர்ந்த....

புதிய பங்கில் முகம்கொடுக்க நேரிடும் அனைத்து சவால்களையும் வென்றிட தூய ஆவியானவர் உங்களுக்கு துணையாளராக இருப்பார். மேலும் புதிய பங்கில் நீங்கள் எவ்வித குறை சொல்லுக்கும் ஆளாகாமல் உங்கள் இறைப்பணியை தொடர்ந்து ஆற்றிட தேவையான மன உறுதியையும், உடல் நலத்தையும், நமது ஆண்டவர் இயேசு உங்கள மேல் நிறைவாக பொழிந்து ஆசீர்வதிப்பாராக. இயேசுவுக்கே புகழ்! மரியோ வாழ்க!

**அன்புடன் என்றும், பெசில் மெல், புனித லோரன்ஸ் ஆலயம்**

## 10 விவிலியப் பகுதி விடைகள்

36. படகு ஒன்றை (3:9)
37. ‘இறை மகன் நீரே’ (3:11
38. மலைமேல் (3:13)
39. தம்மோடு இருக்கவும், நற்செய்தி பறைசாற்றவும், பேய்களை ஓட்டவும் (ந:14-15)
40. திருத்தூதர்கள் (3:15)
41. பொவனேர்கேசு (3:17)
42. இடியைப் போன்றோர் (3:17)
43. யூதாஸ் இஸ்கரியோத்து (3:19)
44. மதிமயங்கியிருக்கிறார் என்று (3:21)
45. பெயல்செபூல் (3:22)




# தெமட்டக்கொட புனித அந்தோனியார் ஆலயத்தின் 110வது வருடாந்த திருவிழா - 2019

**கொடியேற்றம் 20.06.2019 (வியாழக்கிழமை) மாலை 6.00 மணிக்கு**

**நவநாட்கள் தினமும் மாலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை**

**மறையுரை :**

தமிழில் : அருட்பணி. ஜூட் ஜோன்சன் H குணசேகரன் கபிரியேல்

சிங்களத்தில்

அருட்பணி. றொஷான் பர்னாந்து OMI

**மாலை ஆராதனை 29.06.2019 [சனிக்கிழமை] மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.**

**திருநாள் திருப்பலி 30.06.2019**

**காலை 8.00 மணிக்கு – தமிழ்**

கோடி அற்புதரின் ஆசீரைப் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குத்தந்தை பங்குமேய்ப்புப்பணி மன்றம், பங்குமக்கள்

(11024)




# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் [ஓப்செட் முறையில்]
- நவீன பிரதியாக்கம் [டுப்ளோ],
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்




- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உடம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.


**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |


உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.

பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

**வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்**




| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |



| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |



**தொடர்புகொள்ளுங்கள்**

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை,
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்